ஐக்கிய நாடுகள்
சபையின்
உணவு மற்றும்
வேளாண்மை
அமைப்பு

உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள
நடவடிக்கைக்கு
தொழில்நுட்ப
வழிகாட்டு முறைகள்
3



# கடலோரப்பகுதி மேலாண்மைக்குள் மீன்வள ஒருங்கிணைப்பு

உவேஅ
பொறுப்பார்ந்த மீன்வள
நடவடிக்கைக்கு
தொழில்நுட்ப
வழிகாட்டு முறைகள்

3

# கடலோரப்பகுதி மேலாண்மைக்குள் மீன்வள ஒருங்கிணைப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம் 1996

இவ்வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட பெயர்க் குறிப்புகளும் அளிக்கப்பட்ட தகவல்களும் ஒரு நாட்டின் சட்டமுறையான தகுதிநிலை,பெருநிலப் பகுதி, நகரம் அல்லது பகுதியினை பற்றியோ, பிறநாட்டுடனான அந்நாட்டின் எல்லைக்கோடு அல்லது எல்லையை பற்றியோ, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் சார்பாக குறிப்பாக எதுவும் சுட்டிக்காட்டப்படவில்லை.

அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தார்க்கே இப்பதிப்பிலிருந்து எப்பகுதியையும் உரிமையாளரின் முன் அனுமதியின்றி, பதிப்பிடவோ, நினைவில் கொள்ள பதிப்பில் சேமிக்கவோ, புகைப்படம், மின்னணு இயந்திரவியல் அல்லது பிற வழிகளில் அனுப்புதலோ கூடாது. அத்தகைய அனுமதிக்கு நோக்கம் மற்றும் விபரம் குறித்த அறிவிக்கையுடன் இயக்குநர் தகவல் பிரிவு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, வியாலே டொமே டி, காரகல்லா 00100, ரோம், இத்தாலி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

© உவேஅ 1996

*வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம்*
*தமிழில் மொழிபெயர்த்து அச்சடிக்கப்பட்டது*
*சனவரி 2007*

*மொழிபெயர்ப்பு: டாக்டர் ம பரமசிவம்*

*Tamil translation by Dr M Paramasivam*

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*January 2007*

## ஆவணம் தயாரித்தல்

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்துறை மீன் வளர்ச்சிதிட்ட சேவைப் பணியாளர்களால் ஆவணம் தாயாரிக்கப்பட்டது. Mr. David Insull, Senior Officer in the Service நேரடியான பொறுப்பிலிருந்தார். Dr Stephen Cunningham, then of the Univerisity of Portsmouth, UK முதல் வரைவை தயாரித்தார்.

மீன்வளக் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி, பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பின் தொழில் நுட்ப கலந்தாய்வுக்கு தகவலுக்காக வரைவு வழிகாட்டு முறைகள் வழங்கப்பட்டன. ரோம் செப்டம்பர் 26 – அக்டோபடர் 5 1994. வரைவு சுருக்கம் கூர்ந்த ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

வழிகாட்டு முறைகள் தொடக்கமானதே. விதித்தொகுப்பின் கட்டுரை 10 ஐ செயல்படுத்துவதில், இவற்றின் உபயோகத்தால் பெறும் விபரங்களைக் கொண்டு மதிப்பிடப்பட்டு திருத்தப்படும்.

**வழங்குதல்**

அனைத்து உ வே அ உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள்
ஆர்வமுள்ள நாடுகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள்
உ வே அமைப்பின் மீன்துறை
உ வே அமைப்பின் மண்டலங்களில் உள்ள அலுவலர்கள்
ஆர்வமுள்ள அரசு சாரா நிறுவனங்கள்

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன் வளர்ச்சி திட்ட பணி, மீன்துறை
கடலோர பகுதி மேலாண்மைக்குள் மீன்வள ஒருங்கிணைப்பு
உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் பொறுப்பார்ந்த
மீன்வள நடவடிக்கை விதித்தொகுப்பு
தொழில் நுட்ப வழிகாட்டு முறைகள் எண். 3 ரோம், உ வே அ 1996 பக். 24


**சுருக்கம்**

கடல்சார் மீன்வளம், அவ்வாறே விரிவான ஏரிகளில் மீன்வளம் கடலோரப்பகுதியை பல வழிகளில் சார்ந்துள்ளது. பல மீன் பிடிபாடு கரையோர இருப்பை அடிப்படையாகக் கொண்டது. பிறர் கரைக்கு தொலைவில் உள்ளவற்றை பிடிக்கின்றனர். அவையும் தங்கள் வாழ்க்கையில் ஒரு பகுதியை கரையோர நீர்ப்பரப்பில் கழிக்கின்றன. உ.ம். நாற்றங்கால் அல்லது உணவு கிடைக்கும் பகுதி, கரையோரப்பகுதிகளில் உணவுச் சங்கிலியில் முக்கியமான முதன்மை உற்பத்தித் திறனை பொறுத்தே மீன் இருப்பு அமையும். இடம் மற்றும் ஆதாரங்களுக்கு நீர்வாழ் உயிரின வளர்ப்பு பெரிதும் கடலோரப் பகுதியையே சார்ந்துள்ளது.

கடலோரப் பகுதிகளை கடல் சார்ந்த குறிப்பாக மீன்வளம் சார்ந்த தன்மை இப்பிரிவில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். கரையோர சுற்றுச்சூழல் மாற்றங்களை உண்டாக்கும். அதே நேரத்தில் மீன் வளப் பிரிவு மற்ற கரையோர நடவடிக்கைகளையும் பாதிக்கும். உ.ம். இடத்திற்கு போட்டி வழியாக. கடலோரப்பகுதி மேலாண்மை வளர்ச்சித்திட்டங்கள் பார்வையில் மீன்வளப்பிரிவின் வளர்ச்சி மற்றும் மேலாண்மையின் தேவை தெளிவானது. அதாவது ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை என்ற பார்வையில், சுற்றுப்புறச்சூழல் மற்றும் கடலோரப் பகுதி நடவடிக்கைகள்.

பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பு கட்டுரை 10 க்கு குறைந்த அளவே உள்ள கடலோர ஆதாரங்களைப் பயன்படுத்தும் நோக்கத்தை அடைய உதவிடுவதற்காக கரையோர மேலாண்மையுள் மீன்வள ஒருங்கிணைப்புக்கு விளக்கப் பகுதியாக வழிகாட்டி முறைகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக மீன்வளப்பிரிவு கடலோர மேலாண்மை திட்டத்துடன் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் என்ற பிரச்சினையை தெரிவிக்கும் மீன்வளப் பிரிவு மற்றும் இதர பிரிவுகளுடன் எதிர்ச்செயலாற்றம், கடலோர ஆதாரங்கள் குறித்த செயல்முறை மற்றும் மேலாண்மையை நிறுவிடல், கணக்கில் கொள்ளப்படும்.

கரையோரப் பகுதியில் மீன்வள ஆதாரங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் ஆர்வமுள்ள அனைவருக்கும் வழிகாட்டு முறைகள் எழுதப்பட்டுள்ளன. தேசீய அரசு அல்லது மீன்வளத்திற்கு பொறுப்பான அதிகாரமுடையோர் ஆகியோரின் தரத்திற்கு தேவைப்படும் நடவடிக்கைகள் விதித்தொகுப்பில் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் ஆதாரத்தை பயன்படுத்துபவர் திட்டமிடும் முறைகளில் ஆதாரங்களுக்கு குறைவு இல்லாது தெளிவான மதிப்பீடு செய்வதற்கு பங்குபெற வேண்டும்.

ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை (ஒ க மே) பொதுவாக நிலப்பகுதிகளுக்கு இடையே உள்ள ஆதாரங்களின் மேலாண்மை முறைகளை குறிப்பிடும். ஆனால் ஒருங்கிணைந்த மேலாண்மையின் கோட்பாடுகள் நன்னீர் நிலைகளில் தண்ணீர் மற்றும் நிலம் ஆகியவற்றிற்கு இடையே உள்ள பகுதிக்கும் பயன்படும்.

ஒன்று அல்லது பிற பிரிவு குறிப்பாக தெரிவிக்கப்படாதவரை இந்த விதித் தொகுப்பு மற்றும் வழிகாட்டு முறைகளில் மீன் வளப் பிரிவு மீன்வளத்தின் மீன்பிடிபாடு மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு இரண்டையும் எடுத்துக் கொள்ளும்.

வழிகாட்டு முறைகள், நடத்தை விதித்தொகுப்பின் 10 வது கட்டுரைப் பகுதிகளைக் கொண்டிருக்கும். பொருத்தமான விளக்கங்கள் மற்றும் பரிசீலனைகள் அதனை தொடரும்.

## உள்ளடக்கம்

பக்கம்


**பின்னணி** ........ 6

1. நிறுவனங்களின் வடிவமைப்பு ........ 8
2. கொள்கை நடவடிக்கைகள் ........ 15
3. மண்டல ஒத்துழைப்பு ........ 21
4. நடைமுறைப்படுத்துதல் ........ 22

இணைப்பு 1 அருஞ்சொல் பொருள் ........ 24

## பின்னணி

1. மனித இனத்திற்கு மீன்பிடிப்பு முக்கிய உணவு ஆதாரமாக தொன்று தொட்டு விளங்குகிறது. இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நன்மைகள் கிடைக்கின்றன. எனினும், வளர்ந்து வரும் அறிவு மற்றும் மீன்வள தொழில் நுட்பங்களின் வளர்ச்சியினால் தொழில் புதுப்பிக்கப்பட்ட போதிலும் மீன்வள ஆதாரங்கள் எல்லையற்றது அல்ல. வளர்ந்து வரும் உலக மக்கட்தொகைக்கு சத்துணவு, பொருளாதாரம் மற்றும் சமூக நலம் ஆகியவற்றில் அவற்றின் பங்கு நிலை நிறுத்தப்படுவதற்கு, மீன்வள ஆதாரங்களை முறையாக நிர்வகிப்பது தேவை என்பது உணரப்படுகிறது.

2. 1982–ல் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கி ஏற்றுக் கொண்ட கடல் சட்டம் கடல் சார் ஆதாரங்களை நல்ல முறையில் நிர்வகிக்க புதிய வடிவமைப்பை வழங்கியது. உலக கடல் மீன்வளத்தில் 90 சதவீதம் தன்னுள் கொண்டிருக்கும் தனி பொருளாதார மண்டலத்தில் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்த மற்றும் நிர்வகிக்க பொறுப்புகளை கடலோர நாடுகளுக்கு புதிய ஆழ்கடலின் சட்ட அமைப்பு வழங்கியது.

3. சமீப காலங்களில் உணவுத்துறையில் உலக மீன்வளப்பிரிவு மிக விரைவாக முன்னேறுகிறது. மீன் மற்றும் மீன் வளப்பொருட்களுக்கு உலக அளவில் உயர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப புதிய மீன் பிடிக் கப்பல்கள் மற்றும் மீன் பதப்படுத்தும் தொழில்களில் கடலோர நாடுகள் முதலீடு செய்து அவ்வாய்ப்புகளை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடற்ற வகையில் மீன் பிடித்தல் அடிக்கடி மேற்கொள்ளப்படுவதால் பல மீன்வள ஆதாரங்கள் நிலை நிறுத்தப்பட இயலாதவை ஆகிவிடும் என்பது உண்மை.

4. முக்கிய மீன் இருப்புகள் அளவுக்கதிகமாக பிடிக்கப்படுவதற்கு தெளிவான அடையாளங்கள், சுற்றுச் சூழல் அமைப்பில் மாறுபாடுகள், குறிப்பிடக் கூடிய பொருளாதார பின்னடைவுகள், மேலாண்மை மற்றும் மீன் வர்த்தகம் இடையே ஏற்படும் பன்னாட்டு கருத்து வேறுபாடுகள் ஆகியவை மீன்வளத்தின் நீண்ட வளங்குன்றாத தன்மையையும் மற்றும் உணவு விநியோகத்தில் மீன்வளத்தின் பங்கினையும் அச்சுறுத்துகின்றன. ஆகையால், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மீன்வளக்குழு 1991 மார்ச்சில் நடைபெற்ற 19வது அமர்வில் பாதுகாப்பு மற்றும் சுற்றுச் சூழல் அடங்கிய மீன்வள மேலாண்மைக்கு புதிய வகைமுறைகளை பரிந்துரைத்தது. அவ்வாறே சமூக பொருளாதார பரிசீலனைகளும் உடனடியாக தேவைப்படுகின்றன. பொறுப்பார்ந்த மீன்வள நடவடிக்கை கருத்தை ஏற்படுத்த உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் பயன்பாடுகளை வளர்க்க நடத்தை விதித் தொகுப்பை விரிவு படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டது.

5. மெக்சிகோ அரசு, உணவு மற்றும் வேளாண்மை அமைப்புடன் இணைந்து பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு பற்றி கான்கனில் பன்னாட்டு கூட்டத்திற்கு மே 1992ல் ஏற்பாடு செய்தது. கான்கன் அறிவிக்கை அக்கூட்டத்தில் மேலொப்பம் இடப்பட்டு பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித்தொகுப்பை தயாரிக்க ஆதரவு அளித்திட UNCED Rio Summit கவனத்திற்கு 1992ல் கொண்டு வரப்பட்டது. 1992 செப்டம்பரில் நடைபெற்ற ஆழ்கடல் மீன்பிடிப்பின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் தொழில் நுட்ப கலந்தாய்வு ஆழ்கடல் மீன் பிடிப்பு குறித்தான பிரச்சினைகளுக்கு தீர்வாக, விதித் தொகுப்பை மேலும் விரிவாக்க பரிந்துரைத்தது.

6. 1992 நவம்பரில் நடைபெற்ற 102வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் குழு விதித் தொகுப்பை விரிவாக்குவது பற்றி விவாதித்தது. ஆழ்கடல் மீன் பிடிப்பு பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க பரிந்துரைத்தது. 1993ல் நடைபெற இருந்த மீன் வள குழுவிற்கு விதித் தொகுப்பு கருத்துருவை அளிக்க கேட்டுக் கொண்டது.

7. 1993 மார்ச்சில் நடைபெற்ற மீன்வளக்குழுவின் 20வது அமர்வு அத்தகைய விதித்தொகுப்பின் வழிகாட்டு முறைகளையும் சேர்த்த உள்ளடக்கத்தையும் முன்மொழியப்பட்ட வடிவமைப்பையும் பொதுவாக பரிசீலித்தது. விதித்தொகுப்பை மேலும் விரிவாக்க காலக் கெடு வழங்கியது. விதித்தொகுப்பின் பகுதியாக "அதிவேக" அடிப்படையில், ஆழ்கடலில் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளைப்பாதிக்கும் கலன்களுக்கு மறு கொடி இடுதலை தவிர்க்க கருத்துரு தயார் செய்ய உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது. 1993 நவம்பரில் 27வது அமர்வில் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்டம், ஆழ்கடலில் மீன் பிடிக்கும் கலன்கள் பன்னாட்டு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை முறைகளுக்கு இணங்குதலை ஊக்குவிக்கும் ஒப்பந்தத்தை பின்பற்றுவதில் முடிந்தது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் கூட்ட தீர்மானம் 15/93 ன்படி இது விதித் தொகுப்பில் இணைப்பு பகுதியாக இணைந்தது.

8. தொடர்புடைய பன்னாட்டு விதிகளுக்கு இணங்கி ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பின் கடல்சட்டம் 1982 ன் படி பகுதிகளை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் 1982 டிசம்பர் 10, இடம் பெயராத மற்றும் பெரிதும் இடம்பெயரும் மீன் இருப்பு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்த 1995 மற்றும் 1992 கான்கன் அறிவிக்கையின்படி 1992 சுற்றுப்புறச்சூழ்நிலை மற்றும் வளர்ச்சி ரியோ அறிவிக்கை, குறிப்பாக கட்டுரை 17 நிகழ்ச்சி நிரல் 21க்கு இணங்கி அர்த்தம் கொள்ளும் வகையில் பயன்படுத்திட ஏதுவாக விதித்தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

9. தொடர்புடைய ஐக்கிய நாட்டு முகமைகள் மற்றும் பிற அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களுடன் கலந்து ஆலோசித்து விதித்தொகுப்பின் வளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

10. விதித் தொகுப்பு 5 அறிமுக கட்டுரைகள் கொண்டது. அவை தன்மை மற்றும் நோக்கம், குறிக்கோள் பிற பன்னாட்டு காரணகர்த்தாவினருடன் தொடர்பு, செயல்பாடு, கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல் மற்றும் வளரும் நாடுகளுக்கான சிறப்பு தேவைகள்ஆகும். இந்த 5 அறிமுக கட்டுரைகளை தொடர்ந்து பொது கோட்பாடுகள் என்ற கட்டுரை அமையும். அதைத்தொடர்ந்து மீன்வள மேலாண்மை, மீன்பிடிப்பு நடவடிக்கை, நீர்வாழ் உயிரின மேம்பாடு, கடலோர மேலாண்மையுடன் இணைந்த மீன்வளம், பிடித்த மீன்களை பாதுகாக்கும் அறுவடைக்குப்பிந்தைய செயல்பாடு, விற்பனை மற்றும் மீன்வள ஆராய்ச்சி என்ற 6 தலைப்பில் கட்டுரைகள் இடம் பெறும். முன்பே தெரிவித்தவாறு ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பன்னாடுகளுக்கிடையே யான பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை பற்றிய இணக்கத்தை ஊக்குவிக்கும் ஒப்பந்தம், சட்ட விதித் தொகுப்பு நடவடிக்கைக்கு ஒரு அங்கமாக அமைந்தது.

11. நடத்தை விதி தொகுப்பு சுய விருப்பமானது. எனினும் அவற்றின் சில பகுதிகள் டிசம்பர் 10 1982 கடல் சட்டத்தில் தெரிவித்துள்ள பன்னாட்டு விதிகளின் அடிப்படையில் ஆனவை. ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்கள் பாதுகாத்தல் மேலாண்மை பற்றி கடைபிடிக்கப்பட வேண்டிய இணக்கத்தை ஊக்குவிக்கும் 1993ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் போன்றவற்றை குழுவினர் இடையே சட்டப்படி கட்டுப்படும் காரணகர்த்தாக்களுக்கு கட்டுப்படுத்துகிற பகுதிகளையும் விதி தொகுப்பு கொண்டுள்ளது.

12. 31.10.1995 அன்று பொறுப்பார்ந்த மீன்பிடிப்பிற்கான நடத்தை விதிகளை 28வது கூட்ட அமர்வு 4/95 தீர்மானத்தில் ஏற்றுக்கொண்டது. அதே தீர்மானத்தில் விதித் தொகுப்பினை நடைமுறைப்படுத்த உதவியாக பொருத்தமான தொழில் நுட்ப வழிகாட்டு முறைகளை உறுப்பினர் மற்றும் ஆர்வமுடைய உகந்த நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கித் தர உணவு மற்றும் வேளாண்மை அமைப்பை கேட்டுக் கொண்டது.

**1. நிறுவனங்களின் வடிவமைப்பு (கட்டுரை 10.1)**

**“நாடுகள் கடலோரச் சுற்றுப்புறச் சூழலில் எளிதில் மாறக்கூடிய தன்மை, அதன் இயற்கை வளத்தின் முடிவுள்ள தன்மை மற்றும் கரையோரம் வாழும் சமூகத்தின் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வளங்களை நெடிது நிலைநிறுத்துவதற்கு ஒருங்கிணைந்த பயன்பாட்டைக் கருதிச் சட்ட ரீதியான மற்றும் நிறுவனங்கள் மூலமாகப் பொருத்தமான கொள்கைகளை உருவாக்குவதை உறுதிப்படுத்த வேண்டும்”(கட்டுரை 10.1.1)**

13. விரிவான கடலோரப் பகுதி மேலாண்மைக்குள் மீன்வள ஒருங்கிணைப்பை பரிசீலிக்க நாட்டிற்கு முதல் தேவை ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேலாண்மைக்கான கொள்கை, சட்டம் மற்றும் நிறுவன வடிவமைப்புகளை நிறுவுதல் ஆகும்.

14. கடலோரப்பகுதி மேலாண்மையில் அதிகமாக விவாதிக்கப்படும் அடிப்படையான கொள்கை வடிவமைப்பு வளங்குன்றாத சுற்றுச்சூழல் வளர்ச்சியே. இந்த வடிவமைப்பு வரிசையான கொள்கைகளை நிறுவிடும். அவை வளங்குன்றாத சுற்றுச்சூழலை பரிசீலிக்கும். சமூக பொருளாதார பரீசீலனைகள் உட்பட உள்ளூர் நிலைகளை கணக்கில் கொண்டு அவைகளுக்கு இடையில் எவ்வாறு தீர்மானிப்பது என்பது நிர்வாகப் பிரச்சினை.

15. கடலோரப் பகுதி மேலாண்மையில் கடலோர வள ஒதுக்கீடு அடிப்படையான பிரச்சினை. பொருளாதார வளர்ச்சி மற்றும் கடலோர பகுதிகளில் அதிகரித்து வரும் மக்கட் தொகை ஆகியவற்றால் கடலோர ஆதாரங்கள் குறைந்து வருதல் அதிகரிக்கிறது. பிற ஆதாரங்களுடன் பொதுவாக, கடலோர ஆதாரங்களின் குறைவு வெவ்வேறு வகையாக பயன்படுத்துவோருக்கு இடையே தேர்வு அமைவதை விரும்புகிறது. அத்தகைய தேர்வுகளை அமைக்கக்கூடிய வடிவமைப்புகளை நிறுவுதலை கடலோரப் பகுதி மேலாண்மை உட்படுத்தும். முடிவான கொள்கைகள் செயல் படுத்தப்படும்.

16. எனினும், கடலோரப்பகுதி அத்தகைய தேர்வுகளை சிக்கலாக்கும் பல அம்சங்களைக் கொண்டது. முதலில் அது, பொருளியல், சுற்றுச்சூழல் இயல், சமூக பொருளாதார முறைகள் ஆகியவற்றின் எதிர்ச்செயலாக்கம் அடங்கிய சுறுசுறுப்பான அமைப்பு ஆகும். இத்தகைய சுறுசுறுப்பான முறைகளை கணக்கில் கொள்ளும் தேவை கடலோர மேலாண்மைத் திட்டத்திற்கு உள்ளது. கரையோர ஆதாரங்களின் மாறும் தன்மை, இரண்டாவதாக, இந்த ஆதாரங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதை சிக்கலாக்குகிறது, மூன்றாவதாக ஆதாரங்களின் உள்ளூர் மற்றும் மண்டல பண்புகள் பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் கொள்கை ஒத்துழைப்பை சிக்கலாக்குகிறது.

17. இயலும் இடங்களில், பல்வேறு வளர்ச்சியின் மதீப்பீடு மற்றும் பாதுகாப்பு முறைகள் (மேலும் மதீப்பீடு பிரச்சினைகள் 10.2.2 பத்தியில் குறிப்பிடப்படுகின்றன) கொள்கை வடிவமைப்பிற்கு உறுதியான அடிப்படையை வழங்குகின்றன.

18. ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைக்கு முழுமையான அணுகுமுறை தேவை. போதுமானதாக இல்லாத நிலையில் கடலோர ஆதாரங்களின் மேலாண்மையில் குறுகிய பிரிவு வகைமுறையை தவிர்க்க கவனம் கொள்ள வேண்டும். உதாரணமாக, கரையில் மாற்று வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தாத வரை, பாரம்பரிய மீனவர்களைக் கையாளுவது மிகவும் கடினமானது. கொள்கை அமைப்பிற்கு ஒத்துழைப்பு அணுகுமுறை தேவைப்படும் பிற பகுதிகள் பல உள்ளன.

19. இத்தகைய வகைமுறையைப் பெறுவதற்கு நிறுவன அமைப்பு முறை தேவைப்படுகிறது. தேசீய, மண்டல மற்றும் உள்ளூர் அதிகாரம் உடையோர் இடையே பொருத்தமான இணைப்பினை இது வழங்குகிறது. இத்தகைய வடிவமைப்பை வழங்குவதற்கு நாடுகளுக்கு பல்வேறு

கருத்துடைய வகைமுறைகள் உள்ளன. தொடக்கத்தில் ஏற்கனவே உள்ள நிறுவனத்திடம் பிரிவின் ஊடே கரையோர திட்டமிடுதலை தொடங்க அதிகாரம் வழங்கப்படும். கூடுதல் பொறுப்பு அல்லது அதிகாரம் இருக்காது. இந்த வகைமுறை பிரிவின் ஊடே திட்டமிடுதல் தொடங்கப்படுவதில் முடியும் எனினும் நீண்ட காலத்திற்கு அரிதாகவே திறன் வாய்ந்ததாக இருக்கலாம். மேலும், கருத்துக்களின் வழியே, சில நாடுகள் பயன்படுத்தும் வகைமுறைகளில் வெவ்வேறு நிறுவனங்களும் பொறுப்புகளைத் தக்க வைத்துக் கொள்கின்றன. ஆனால் திட்டமிடுதல் நடவடிக்கைள் ஆகியவற்றை மைய அமைப்பு மூலம் இணைந்து செயலாற்றுகிறது. அத்தகைய அமைப்புகளின் அதிகாரம் குறிப்பிடப்படும் வகையில் மாறுபடுகிறது. முடிவாக நாடுகள் பயன்படுத்தும் உண்மையான ஒருங்கிணைப்பு வகைமுறையில், திட்டமிடுதல் மற்றும் ஆதார ஒதுக்கீடு ஆகியவற்றின் முக்கிய பொறுப்பு, ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய அமைப்பு தற்போது இருக்கும் நிறுவனமாக செயல்பட அதிகரிக்கப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டதாக இருக்கலாம். அல்லது மாறாக புதிய ஒன்றாகவும் இருக்கலாம்.

20. திறன்வாய்ந்த மேலாண்மை வடிவமைப்பை அமைப்பதில், நிறுவன ஆய்வு தேவையானது அதனால் வெவ்வேறு நிறுவனங்களின் பங்கு மற்றும் பொறுப்புகள் ஆய்வு செய்யப்படும். தேவையெனில் திருத்தப்படும். ஆகையால் ஒருபக்கத்தில் எல்லை வரையறை மற்றும் மற்றொரு பக்கத்தில் முக்கியமான பிரச்சினைகள் இல்லை, அதற்காக பொறுப்புடைய நிறுவனமும் தேவையில்லை. ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மைக்கு நிறுவன நுட்பம் கீழ்க்கண்ட வற்றை உறுதியளிக்க வேண்டும். முதலாவதாக பொருத்தமான பிரிவு பொறுப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பொருத்தமான இணைந்தும் / ஒத்துழைக்கும் ஏற்பாடுகள் நிறுவப்பட்டுள்ளன. மூன்றாவதாக கடலோரப்பகுதியில் நிறுவனங்கள் எல்லா நிலைகளிலும் கொள்கைகளை செயல்படுத்துவதில் இசைவை உறுதிப்படுத்துவதை தெரிவித்திருக்க வேண்டும்.

21. சட்ட பூர்வ வடிவமைப்பு தேவைப்படுகிறது. அவை கடலோர மேலாண்மை நிறுவனங்கள் மற்றும் அவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை சட்ட பூர்வமாக கவனிக்கும். தற்போது அமலில் உள்ள சட்ட அமைப்பில் இடைவெளி, உள்ளடக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஒரு நாட்டின் சரியான சட்ட அமைப்பு அதுபோன்ற சமூகம் அரசியல் பொருளாதாரம் மற்றும் பொருளாதாரப் பின்னணி கொண்டிருந்த போதிலும் மற்றொரு நாட்டிற்காக நேரடியாக மாற்றப்பட தேவையில்லை.

**"கடற்பரப்புகள் மனித சமுதாயத்திற்குப் பலவகையில் பயன்படுவதைக் கருத்தில் கொண்டு கடல்மேலாண்மைத் திட்டம் தீட்டுதல் மற்றும் கடலோர வளர்ச்சிப் பணிகளைப் பற்றி முடிவெடுக்கும்போது மீன்துறை சார்பான பிரதிநிதிகளையும் மற்றும் மீனவ சமுதாயத்தினரையும் சரியான முறையில் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும் என்பதற்கு நாடுகள் உறுதி தர வேண்டும்" (கட்டுரை 10.1.2)**

22. அடிக்கடி மீன்வளப் பிரிவு, கடலோரப் பகுதிகளில், பிற பிரிவினருடன், கரை மற்றும் நீர்ப்பரப்பு ஆகிய இரண்டிலும் இடத்திற்காக போட்டியிடும். இரண்டிலும் நேரடியாக உற்பத்தி நடவடிக்கைகள், மீன்பிடிப்பு, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் பொருட்களை கையாள, பதப்படுத்த, விநியோகிக்க என போட்டியிருக்கும். அதன் விளைவாக, மீன்வளம் மற்றும் மீன்வள பிரிவுக்கு பொறுப்பானவர் அப்பகுதியில் வளர்ச்சிகுறித்த முடிவுகளில் பங்கு பெறுதல் வேண்டும். இதனைப் பொருத்த வரை கடலோர சுற்றுப்புறச் சூழ்நிலையில் அடிப்படையில் ஆன பிரிவு என்ற வகையில், மீனவர் மீன் வளர்ப்போர், கடலோர சுற்றுப்புறச் சூழ்நிலையின் பார்வையாளர்களாக பங்கு பெறுவது குறிப்பிடத்தக்கது. தூய்மைக்கேடு மற்றும் பிற காரணங்களால் நீர் வாழ் சுற்றுப்புறச் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளை வழக்கமாக மீன்பிடிப்போர் மற்றும் கடலோர மீன் வளர்ப்போர் முதலில் பார்வையிடுவர்.

23. பிற பிரிவுகளின் செயல்பாடுகளினால் மீன் வளத்திற்கு ஏற்படும் மிகப்பெரிய விளைவுகளின் தொகுப்பு பெட்டிச்செய்தி 1–ல் உள்ளது.

24. மீன்வளத்திற்காக நிறுவனம் அல்லது நிறுவனங்களை நியமித்தல் மூலம் போதுமான மீன்வள ஆர்வம், பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட வேண்டும். இவற்றிற்கு பிரிவு மற்றும் உட்பிரிவு பொறுப்புகள் இருக்கும் மீன்வளத்திற்கு ஒரு அதிகாரம் பொருந்திய கழகம் அமைத்து பிரிவு மற்றும் உப பிரிவு பொறுப்புகள் அளித்து, மீன்வளப்பிரிவின் மீன்வள ஆதாரம் எடுத்துக் கூறப்பட இது பயன்படுத்தப்படுகிறது.

25. கடற்கரை நடவடிக்கைகளால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் மாற்றத்திற்கு குறிப்பாக இணங்கி இருக்கச் செய்வதே பிரிவின் தன்மையாகும். வேளாண்மைப் பிரிவு போன்ற கரையை அடிப்படையாகக் கொண்ட பல பிரிவுகளோடு வெவ்வேறு மற்றும் முரண்பாடான ஆர்வத்தை தோற்றுவிக்கும். மேலும் மீன் பிடிபாடு மற்றும் குறைந்த அளவில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு

**பெட்டிச்செய்தி 1 – பிற பிரிவு நடவடிக்கைகளால் தோன்றும் மீன்வளத்தின் பாதிப்புகள்**

<u>தூய்மைக்கேடு</u> – நிலத்தைச்சார்ந்த ஆதாரங்களிலிருந்து தூய்மைக்கேடு ஏற்படும். உ.ம். ஆற்றில் விடுவிக்கப்பட்டு கடலோரப்பகுதிக்கு கொண்டு வரப்படும் தொழிற்சாலை மற்றும் வேளாண்மைக் கழிவுகள், ஆற்றுக்குள் வழிந்தோடும் பூச்சி மருந்து மற்றும் உரங்கள், சாக்கடை அல்லது கடலில் கலக்கும் கழிவுகள் உ.ம்., எண்ணெய் கசிவு, கடலில் கொட்டப்படும் நச்சுகழிவுகள் சில தூய்மைக்கேடு கடலோர உற்பத்தி திறனை அதிகரிக்கும். ஆனால் அடிக்கடி உற்பத்தி குறைவதில் முடிவடையும். சில தீவிரமான நிகழ்வுகளில் மனிதர்களின் நலத்திற்கு அபாயம் ஏற்படும். உ.ம். Shell Fish போன்றவற்றில் நச்சுப்பொருட்கள் சேருதல். மீன் உற்பத்தி குறைவு மீன்வளப்பிரிவின் பொருளாதாரத்தில் பாதகம் விளைவிக்கும். மீன் வளப் பிரிவும் கடலோர தூய்மைக்கேட்டை ஏற்படுத்தும். உ.ம். மீன்பிடிக்கலன்களிலிருந்து வெளியேறும் எண்ணெய் காரணமாக தூய்மைக்கேடு, மீன்களை பதப்படுத்தும் தொழிற்சாலைகளிலிருந்து கழிவுகள், தீவிர நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளால் அங்ககப்பொருட்கள் மற்றும் சத்துப் பொருட்கள் தண்ணீர் மற்றும் கடல் படுகையில் படிவது போன்றவை. பொதுவாக மீன்வளப் பிரிவு தூய்மைக்கேட்டை ஏற்படுத்துவதை விட அதிகமாக தூய்மைக்கேட்டால் பாதிக்கப்படுகிறது.

<u>உறைவிடத்தின் தரம் குறைதல்</u> – இது நேரடியாக ஏற்படும். உ.ம். பலதரப்பட்ட நடவடிக்கைகளுக்காக சதுப்பு நிலக்காடுகள் அழிக்கப்படுதல், பவளக் கற்கள் உடைத்து எடுக்கப்படுதல் அல்லது மறைமுகமாக நடைபெறுவது உ.ம். காடுகளை அழித்தல் அல்லது குறைந்த அளவு நில பயன்பாட்டு முறைகளால் ஏற்படும் வழிந்தோடும் மண் போன்றவற்றால் கடற்புல்களின் மீதும் பவளப் பாறைகள் மீதும் வண்டல் படிதல். தூய்மைக் கேட்டினைப் போன்று உறைவிடத்தின் தரம் குறைதலும் மீன் வளப்பிரிவின் பொருளாதார நலத்தைப் பாதிக்கும். சில உறைவிடத்தின் தரம் குறைதல் மீன் வளப்பிரிவின் தொடர்புடையது. உ.ம். வெடி பொருட்கள். நச்சுப் பொருட்களைப் பயன்படுத்தி மீன் பிடித்தல், சதுப்பு நிலக் காடுகளை அழித்தல், நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தியில் வேதியியல் பொருட்களை பயன்படுத்துதல்.

<u>முரண்பாடுகள்</u> – கரையோர மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆகியவை பாதுகாப்பு அற்ற உரிமையைப் பெற்றுள்ள இடங்களில் பிற கடலோர வளர்ச்சிகள் (குறிப்பாக கண்ட இடங்களில் பரவும் நகர்ப்புறம் மற்றும் சுற்றுலா வளர்ச்சி) படிப்படியாக பாரம்பரிய பகுதிகளை பலவந்தமாக கைப்பற்றும் இடங்களில் இது நிகழும்.

பிரிவுகளில் சில பிரச்சினைகள் வேளாண்மைப்பிரிவு எதிர்கொள்வது போன்றவை அல்ல. குறிப்பாக விவசாய உற்பத்தியில் – அதிக இடுபொருள் அதிக உற்பத்தியில் முடிவது – மீன் துறைப்பிரிவில் ஏற்புடையது அல்ல. ஆகையால் மீன்வள நிறுவனம் பிற அமைச்சகம் அல்லது துறையின் பகுதியாக ஏன் இருக்கக் கூடாது என்பதற்காக விவாதங்கள் இருக்கலாம் முரண்படும் ஆர்வமுடைய சூழ்நிலையே தோன்றும்.

**26.** மீன்வளப்பிரிவிற்கு கடலோரப்பகுதி முக்கியத்துவம் வழங்கப்பட்ட நிலையில் மீன் வளத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகாரமுடையோர் கடலோர மேலாண்மை திட்டமிடும் முறைகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக மீன்வள அதிகாரமுடைய சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு மதிப்பீடு ஆய்வுகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். திட்டங்கள் கடலோர நீர்ப்பரப்பில் சாத்தியமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இடங்களில், கடலோரப் பகுதி கட்டுமானத்திற்காக அனுமதி வழங்கப்படும் பொழுது அவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். மீன்வளத்தின் மீதான பாதிப்புகள் பற்றி கலந்து பேசப்பட வேண்டும். கடலோர பகுதி குறித்து சட்டம், கட்டுப்பாடு போன்றவற்றிக்காக வரைவு தயாரிப்பில் அவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். மீன் வள ஆர்வத்தை ஆக்கிரமிக்கும் இடங்களில் தலப்பரப்பு சம்மந்தமான திட்டமிடும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். உ.ம். துறைமுக வளர்ச்சி. மிகவும் முக்கியமாக ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை முறைகளில் அவர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**27.** பல நிகழ்வுகளில் முழுமையான தேசீய அல்லது மண்டல அளவில் நிறுவப்பட்டுள்ள வடிவமைப்புக்கு உட்பட்டு உள்ளூர் அளவில் கடலோர மீன்வளம் மிகவும் எளிதாக நிர்வகிக்கப்படலாம். ஆகையால் பல நாடுகளில் மீன் வள அதிகாரமுடையோர், நிர்வாகிகளுக்கு இடையேயான பேச்சு வார்த்தைகளில் மிகுந்த திறன் படைத்தவர்களாக உள்ளனர். பொருத்தமான தேசீய, மண்டல மற்றும் உள்ளூர் அதிகாரமுடையோர் அடங்கிய பொருத்தமான வடிவமைப்பு, மீன்வள மேலாண்மை நிலையில் நன்கு செயல்படுத்தப்படுகிறது என்பதை உறுதி செய்ய நிறுவப்பட வேண்டும்.

**28.** பொதுவாக கடலோர மேலாண்மையுடன், நிர்வாகத்தின் அனைத்து நிலையிலும் போதுமான வரை நன்கு தெரிவிக்கப் பட்டு பொதுவான நோக்கங்களை அடைய தூண்டப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்வது மீன் வள அதிகாரமுடையோரின் முக்கிய பணியாகும். மேலாண்மையில் பல்வேறு நிலைகளே ''மீன்வள அதிகாரமுடையோர்'' என்பதை ஏற்படுத்தும் நிகழ்வின் ஒவ்வொன்றான அடிப்படையில் ஒவ்வொரு நிலையிலும் அங்கீகாரம் முடிவு செய்யப்படும்.

**29.** மீன்வள அதிகாரமுடையோர் மீன்வளப்பிரிவிலுள்ள அனைத்து பங்குதாரர்களுடன் நுட்பத்தை நிறுவுவது முக்கியமானதாகும். அப்பொழுது தான் பிரிவுகளுக்கு இடையேயான விளைவுகளை பரிசீலிக்கும் பொழுது நிர்வாகிகளுக்கு இடையில் நடைபெறும் விவாதங்களில் பங்கு கொள்ள இயலும். பிரிவில் ஆர்வமுள்ளோர் என அரசு உணர்த்துபவர்களையே பங்கு தாரர்கள் என கருதப்படுகிறது.

**''நாடுகள் சரியான முறையில் நிறுவன மற்றும் சட்ட விதி கட்டமைப்புகளை சரியான முறையில் கடற்கரை வளங்களை மேலாண்மை செய்யும் வகையில் உருவாக்கிக்கொள்வதுடன், அதே நேரத்தில் கடலோர மீனவ சமுதாயத்தின் உரிமைகளும் மீன்பிடி முறைக்கும் அவர்களின் வளர்ச்சியை எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் நிலை நிறுத்தக்கூடிய மீன் வள மேம்பாட்டுடன் இயன்ற அளவு இணக்கமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.'' (கட்டுரை 10.1.3)**

**30.** கடலோர புதுப்பிக்கக்கூடிய வளங்களுக்கு திறந்த சுதந்திரமான பாதை, கடலோரப்பகுதி மேலாண்மையில், பிரச்சினைக்கு முக்கிய காரணமாகும். மீன்வளப்பிரிவில் நீண்ட காலமாகவே

இது பிரச்சினையாக உணரப்பட்டுள்ளது. மேலும் இதர கடலோர வளங்களை குறிப்பாக தண்ணீர் இடம் மற்றும் முதன்மை உற்பத்தித்திறன் கொண்ட கடலோர வளங்களைப் பாதிக்கும்.

**31.** சுதந்திரமான மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடிக்கும் முறை கடலோர வளங்களுக்கு இருக்கும் இடங்களில் முடிந்தவரையில் விரைவாக இதனை, தனிப்பட்ட உபயோகிக்கும் உரிமைபெற்ற ஒன்றாக மாற்றப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது. கட்டுப்பாடற்ற மீன்பிடிக்கும் முறை மற்றும் சுதந்திரமான வழியினால் பிரிவிற்குள் திறமையின்மை உருவாகிறது. கடலோரப்பகுதிகளில் பிற பிரிவினருடன் எதிர்ச் செயல்பாடுகள் போன்ற பல காரணங்களும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். மீன் வளப்பிரிவு திறந்த வழியை வைத்திருப்பின் பிற நிறுவனங்கள் மற்றும் வளங்களை பயன்படுத்துவோர் ஆகியோரிடம் உயர்த்தப்பட்ட பயன்கள், வளத்திற்கான வாடகை போன்று வீணாகி விடும் வரை அவர்களது நடவடிக்கைகளை மீன் வளப்பிரிவிற்காக குறைத்துக் கொள்ள தூண்டுதல் கடினமான செயலாகும். தனிப்பட்ட உரிமை அடிப்படையிலான ஆட்சிக்கு முன்மொழியப்படுதலால் கடலோர ஆதாரங்களில் வளர்ச்சிக்கான முழு உரிமை அடிப்படையிலான அமைப்பை இயக்குவது முக்கியமானதாகும்.

**32.** கடலோரப்பகுதியில் மீன்வளம் மட்டுமே திறந்த வெளி ஆதாரம் அல்ல. முக்கிய வளங்களான சதுப்பு நிலக்காடுகள் பவளப்பாறைகள் கழிவுப்பொருட்களை வெளியேற்ற கடலோரப் பரப்பை பயன்படுத்துவது போன்றவைகளுக்கும் பாதை சுதந்திரமானது மற்றும் திறந்த ஒன்றே ஆகும். இதன் விளைவாக கடலோரப் பகுதிகளை பயன்படுத்தும் பிற உபயோகிப்பாளர் குறிப்பிடக்கூடிய பாதகமான விளைவைப்பெறுவர். மீன்வளப்பிரிவில் மட்டுமல்லாது உதாரணமாக உறைவிடம் தரங்கெடுதல், நீர்வாழ் உயிரின தூய்மைக்கேடு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பின் பிற மதிப்பு மிக்கப் பணிகளுக்கும் பாதகம் ஏற்படும்.

**33.** பிரிவுகளுக்கிடையேயான முரண்பாட்டைக் கையாள கட்டுப்பாடு மற்றும் பொருளாதாரம் என்ற விரிவான இரண்டு வகைமுறைகள் உள்ளன. இருவகை முறைகளுக்கும் ஒரே நோக்கங்கள். தங்கள் நோக்கங்களை எவ்வாறு இவை அடைவதற்கு எவ்வழியில் முயற்சிக்கின்றன என்பதில் தான் வேறுபாடு. செய்யக் கூடியவற்றை கட்டுப்பாடு சட்ட ரீதியாக கட்டுப்படுத்துகிறது. பொருளாதார முறைகள் பொருத்தமான நடத்தையை ஊக்குவிக்க தூண்டுதல் அல்லது தூண்டுதல் இல்லாமையை வழங்குகிறது. பொருளாதார முறைகளில் பல நன்மைகள் உள்ளன. குறிப்பாக அரிதான வளங்களை திறமையாக சந்தை வடிவமைப்புக்கு உட்பட்டு வழங்குகிறது. எனினும் பயன்படுத்துதல் கடினமாகும். பல சூழ்நிலைகளில் கட்டுப்பாட்டு வகை முறையை பயன்படுத்துவது தேவையானது ஆகும். சில நேரங்களில் பொருளாதார கொள்கை சாதனங்கள் பாராட்டும். கட்டுப்பாடு மற்றும் பொருளாதார முறைகளின் சுருக்கம் பெட்டிச் செய்தி 2 ல் வழங்கப்பட்டுள்ளது.

**34.** ஒரே நாட்டிலும் கூட திறந்த வெளிப் பிரச்சினையை நீக்க அதே தீர்வை எல்லா இடங்களிலும் பயன்படுத்திட இயலாது. முழுவதும் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டதே சிறந்த தீர்வு – வளத்தின் தன்மை, நிறுவன கட்டமைப்பு தற்போதையது மற்றும் வரலாறு உடையது ஆக இரண்டும் நோக்கங்கள். மேலும் காலப்போக்கில் சிறந்த தீர்வும் மாறலாம். ஆகையால் அரசுக்கு எவற்றை அடைய முயற்சிக்கிறோம் என்பதில் தெளிவு தேவை. சிறந்ததைத் தேர்ந்தெடுக்கும் முன்பாக பல்வேறு சாத்தியமான தீர்வுகளை பரிசீலிக்க வேண்டும். மாறும் சூழ்நிலைக் கேற்ப ஈடுகொடுக்கும் வகையில் வளையும் தன்மையுடன் இருப்பதும் அவசியமாகும்.

**35.** திறந்த வழியின் ஒரு பகுதி, வளத்தைப்பயன்படுத்துவோர் வளங்களின் மீதான தங்கள் உரிமையை அரசு உணர்ந்து கொள்ள இயலாத தன்மையாகும். அடிக்கடி இது பாரம்பரிய வழக்கமாக மீன்பிடிப்போர் மற்றும் மீன் வளர்ப்போர் ஆகியோர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தும் அதே நேரத்தில் உபயோகிப்போர் ஆதிக்கம் பெறுகின்றனர். உதாரணம் பெட்டிச்செய்தி 3–ல் உள்ளது. சட்ட ஆட்சி, உள்ளூர் வழக்கமாக பார்க்கும் உரிமை கடமைகளை உணர ஒருங்கிணைக்க போதுமான வளையும் தன்மை உடையதாக உள்ள இடங்களில், சட்டபடி

**பெட்டிச்செய்தி 2 – கட்டுப்பாடு மற்றும் பொருளாதார கொள்கை கருவிகள்**

தடைசெய்தல் அல்லது கட்டுப்பாடு மூலமாக வளங்களை பயன்படுத்துதலை கட்டுப்பாட்டு முறைகள் கட்டுப்படுத்துகின்றன. இவை உள்ளடக்குபவை ஆவன. உ.ம். செய்முறை அல்லது பொருள் கட்டுப்பாடு, தூய்மைக்கேடான நடவடிக்கைகளை தடை செய்தல் அல்லது கட்டுப்படுத்துதல். உ.ம். சில மீன்பிடி சாதனங்களை பயன்படுத்துதல், மீன் பிடி முறைகள், பருவநிலை, பகுதி, காலம். இணக்கமின்மை அபராதத்தில் முடியும் என்பது வழக்கமான கட்டுப்பாடுகளின் முக்கிய அம்சமாகும்.

செயல்படுத்துவதே கட்டுப்பாட்டு வகைமுறையில் முக்கிய பிரச்சினை. பல நாடுகளில் செயல் படுத்துவதற்கு போதிய முறைகள் இல்லாத நேரத்தில், செயல்படுத்த இயலாத கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தாது இருத்தல் நல்லது என கருதப்படுகிறது. ஏற்படக் கூடிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப கையாளுவதற்கு போதிய வளைந்து கொடுக்கும் தன்மையுடன் இருப்பது கட்டுப்பாடுகளின் மற்றொரு பிரச்சினை. சாத்தியமான இப்பிரச்சினைகளை கையாளுவதற்கு ஒரு வழி, ஆர்வமுள்ள குழுவினர்களுக்கு இடையில் பேச்சு வார்த்தை மற்றும் உதவுதல் முறைகளை நல்ல முறையில் கட்டுப்பாடுகள் உதயமாகும் நோக்கத்தில் கட்டுப்பாடுகளின் பிற்சேர்க்கையாக்கலாம்.

பொருளாதார வகைமுறை பல வழிகளைப் பயன்படுத்தும் உ.ம். கட்டணம்(பயன்படுத்த கட்டணம், கழிவுகளுக்கான கட்டணம்) மானியம், சந்தை உண்டாக்குதல் (வர்த்தக உரிமங்கள்) வைப்புத் தொகை திரும்பப்பெறும் அமைப்பு மற்றும் பொருளாதார அமல்படுத்துதல்களுக்கு உற்சாகம் ஊட்டுதல் (இணங்காமைக்கு கட்டணம், செயலாக்க பத்திரங்கள்)

அமுல்படுத்தப்படின் பொருளாதார வகைமுறைகளின் முக்கிய பயன் பொதுவாக பொருளாதாரத்திற்கு உட்பட்டு கடலோர ஆதாரங்களை ஒதுக்கீடு செய்யும் பிரச்சினையை, அதே கட்டமைப்புக்குள் கொண்டு வருதல் ஆகும். அவை ஆதாரங்களின் ஒதுக்கீட்டை முடிவு செய்ய பயன்படும். வகைமுறை பகுதியாக பயன்படுத்தப்பட்டிருப்பினும் மேலாண்மை முறையின் வளையும் தன்மையை இது மேலும் அதிகப்படுத்தும் உ.ம். அவர்களைப்பாதிக்கும் கட்டுப்பாடுகளை மாற்றுவதற்கு பதிலாக வெவ்வேறு உபயோகிப்பாளருக்கும் கட்டணத்தை திருத்தி அமைப்பது எளிதாகும். பொருளாதார வகை முறையின் அற்பமானதாக இல்லாத பயன், மேலாண்மையில் சில செலவினங்களை ஈடு செய்யபோதிய நிதி தோற்றுவிக்கப் பயன்படும்.

எப்படியாயினும் நாடுகள் வள உரிமைகளை வழங்கிட முடிவு செய்யும். சட்ட ஆட்சி இந்த வகைமுறைகளை அனுமதிக்காத இடங்களில் அதற்கு ஏற்ப சட்டத்தை திருத்திட நாடுகள் விரும்பும். அதே நேரத்தில் மீன் வள அதிகாரம் உடையோர், மீன் பிடிப்போர் மற்றும் கடலோர சுற்றுப்புறச்சூழல் விதிக்கும் சுற்றுச்சூழல் இடர்பாடுகளை மதித்தல் ஆகியவை தேவைப்படும் நிலையை நிறுவும்.

**36.** அத்தகைய முறைகள் சுற்றுப்புறச்சூழ்நிலையைப் பாதுகாக்கின்றன. அவர்கள் வாழ்வின் அங்கமாக, சுற்றுப்புறச்சூழ்நிலை தரத்தில், உரிமை பாரம்பரிய மற்றும் மீன் பிடிப்போருக்கு ஒரு நிலை வரை வழங்கப்படுகிறது.

**37.** பாரம்பரிய மற்றும் வழக்கமாக ஆதாரத்தை பயன்படுத்துவோர் தங்களுக்கு மீன் கிடைத்தலை பாதிக்கும் பருவகால மாற்றங்கள் முக்கியமாக வேளாண்மை நடவடிக்கைகள் (விதைப்பு, அறுவடை போன்றவை) காலத்தை முடிவு செய்தல் ஆகியவைகளுக்கு பதிலாக வழிமுறைகளை ஏற்படுத்தி உள்ளனர். எந்த ஒரு ஆதாரத்திற்கும் திட்டமிடுபவர்களால்

**பெட்டிச்செய்தி 3 – ஏற்றுக் கொள்ளக்கூடிய சுற்றுப்புறச் சூழ்நிலை தரத்திற்கு பாரம்பரிய மற்றும் வழக்கமாக மீன் பிடிப்போர், மீன் வளர்ப்போர் ஆகியோரின் உரிமைகள்**

கடலோரப் பகுதிக்குள், சுற்றுப்புறச் சூழ்நிலை பொருட்களுக்கு சந்தை வசதி இல்லாத இடங்களில் (உ.ம். பவளப்பாறைகள் இயற்கையான உற்பத்தி) பவளப்பாறைகளை உபயோகித்து மீன் பிடிப்போர் வருங்காலத்தில் வளமாக இருக்க தேவையான உரிமைகளைப் பெற இயலாதவர்கள் ஆகிவிடுகின்றனர். உற்பத்தி சேதமடைந்து பிற உபயோகிப்பாளர்களால் அச்சுறுத்தப்படுகின்றது. உ.ம். பவளப்பாறைகள் உடைப்பு, சுற்றுலா. சிறிய அளவிலான கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு பல நாடுகளில் நீண்ட கால பாரம்பரியம் மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய முறை. அது தொழில் துறை நடவடிக்கைகளால் நீக்கப்பட்டுள்ளது

வடிவமைக்கப்படும் திட்டங்கள் அம்முறைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறினால் சமூக பொருளாதார விளைவுகள் ஏற்படும்.

**“நாடுகள் மீன்வளத்தை உபயோகிப்பவர்களுக்கும் மற்றும் கடற்கரை வளங்களை பயன்படுத்துபவர்களுக்கும் ஏற்படும் பிரச்சினைகள், மோதல்களை தடுக்கும் வகையில் மீன் துறை சம்மந்தமான செயல்பாடுகளை சிறப்பாக மாற்றி அமைத்து கொள்ள வேண்டும்.” (கட்டுரை 10.1.4)**

**38.** பல பகுதிகளில் உள்ளவர்கள் ஒரே பகுதியில் மீன்பிடிக்க விரும்புவதால் மீன் பிடிப்போரிடையே முரண்பாடுகள் தோன்றும். பல்வேறு மீன்பிடி சாதனங்கள் பயன்படுத்துவோர்களுக்கிடையில் வர்த்தக ரீதியில் மீன் பிடிப்போர் மற்றும் பொழுது போக்கிற்காக மீன் பிடிப்போர் இடையில், மீன் பிடிப்போர் மற்றும் மீன் வளர்ப்போர் இடையில் மற்றும் சுற்றுலா நடத்துபவர்களுக்கிடையில் இடம், ஆதாரம் ஆகியவற்றிற்காக போட்டியிடுதல் போன்ற முரண்பாடுகள் பல சூழ்நிலைகளில் தோன்றும்.

**39.** மீன் வளப்பிரிவிற்குள் முரண்பாடுகள் தெளிவான ஆதார ஒதுக்கீடுகளில் முடியும். பகுதிகளில் ஒதுக்கீடு செய்வதன் மூலம் கையாளப்படும் ஆதாரங்கள் குறிப்பிட்ட பகுதிகளை ஆக்கிரமிக்கும் இடங்கள் அல்லது குழுவினருக்கிடையே முரண்பாடுகளைக் குறைத்தல் (ஆதாரம் பகுதிகளுக்கிடையே நகரும்பொழுது) உ.ம். இழுவை மீன் பிடிப்பு பகுதிகள் அல்லது இடுபொருள்களில் கட்டுப்பாடு (மீன்பிடி சாதனங்கள் வரையறை, காலக்கட்டுப்பாடு போன்றவை) வெளிப்பாடு கட்டுப்பாடுகள் (பகிர்வு போன்றவை) ஆகியவை மூலமும் கையாளப்படலாம். அதிகாரம் படைத்தோர், மீன் பிடிப்போர், மீன் வளர்ப்போர் குழுக்கள் மீன்பிடிப்பு பகுதிகளில் மீன் வளர்ப்பில் பொருத்தமாக நிறுவுதலை பரிசீலிக்கலாம். அவ்விடங்களில் அத்தகைய பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு முடியும் எனில் முடிவுக்கு கொண்டு வரலாம்.

**40.** பிரிவுகளுக்குள்ளாக தோன்றும் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருதல் பிரிவுகளுக்கிடையேயான முரண்பாடுகளை விட தீர்வுகள் ஒரே மாதிரியான போதிலும் மிகவும் கடினமானதாகும். மீன் வள அதிகாரம் உடையோர் பிற நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகளின் போது மீன் வளப்பிரிவின் ஆர்வத்தை, மீன் பிடிப்போர் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்போர் ஆர்வத்தை பிற பிரிவினர் மதிப்பதை உறுதி செய்ய வேண்டும். தேவையெனில் மீன் வள அதிகாரமுடையோர், அவர்களது ஆர்வத்தைப் பாதுகாக்க சட்டத்தின் புகலிடத்தை பெறும் வாய்ப்புள்ளது.

41. முக்கியமாக காலம் மற்றும் பகுதி வரையறை இணைப்பை பயன்படுத்தும் மீன்வளத்தை உள்ளடக்கிய பிரிவுக்குள் வேறுபாடுகளைத்தீர்க்கும் வகைமுறையை பகுதியாக்குதல் வேண்டும். பொருளாதார முறைகளும் பங்கு பெறுகின்றன.

**"நாடுகள் மீன்வளத்துறை பிரிவுகளுக்குள்ளே மற்றும் மீன்வளத்தை பயன்படுத்துபவர்களுக்கிடையே மற்றும் கடற்கரை வளங்களை பயன்படுத்தும் மற்றவர்களுக்கிடையே உருவாகும் மோதல்களை தீர்த்துக் கொள்ள நிர்வாக மட்டத்தில் தகுந்த நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் உருவாக்க முயல வேண்டும்" (கட்டுரை 10.1.5)**

42. இயலும்பொழுது, சாத்தியமான முரண்பாடுகள் எதிர்பார்க்கப்படலாம். அதிகாரத்தை நிலைநாட்ட ஆக்கிரமிப்பு ஏற்படலாம். மீன் வளப்பிரிவு வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் திட்டங்கள் மீன் வளப்பிரிவின் தோற்றத்திற்கு மட்டுமல்லாது ஒருவகை இருப்புக்காகவும் ஏற்படுத்தப்படுகின்றன. மீன் வள மேலாண்மை அதிகாரமுடையோர், பிற மீன்வளம் மற்றும் பிரிவுகளுடன் எந்த அளவிற்கு எதிர் செயல்பாடு எந்த அளவு வரை விளக்கமாக நடைபெறலாம் என்பதை பரிசீலிக்கும். சாத்தியமான, உண்மையான முக்கியத்துவம் கருதப்படும் இடங்களில், திட்டங்களுக்குட்பட்டு அத்தகைய எதிர் செயல்பாடுகள் பரிசீலிக்கப்பட வேண்டும். சாத்தியமான முரண்பாடுகளைக் கையாள நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

43. கடலோரப்பகுதி மேலாண்மையில், மிகவும் முக்கியமான நிறுவன சட்ட பூர்வமான பணி, முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு நுட்பம் உள்ளது என்பதை உறுதி செய்தலே ஆகும். கடலோர வளங்கள் அரிதாகி வருவதால் பிரிவுகளுக்கிடையே தற்போதும், வருங்காலத்திலும் போட்டி உரிமைகளை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வருவது என்பதை பரிசீலிக்கும் தேவை ஏற்படுகிறது. திட்டமிடும் பிரச்சினைகளில் மீன் வள அதிகாரமுடையோர் கலந்து பேசப்பட்ட போதிலும், இன்னும் முரண்பாடுகள் தோன்றுகின்றன. அவற்றை முடிவுக்கு கொண்டு வர நுட்பங்களின் தேவை ஏற்படுகிறது.

44. நீர்வாழ் உயிரின சுற்றுப்புறச் சூழ்நிலை ஆதாரங்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் எல்லையை அடையாளம் காண்பது, மீன் வள அதிகாரமுடையோர் முக்கிய பங்கினை பின்பற்ற அவசியமாகிறது. இப்பணிக்காக பொருத்தமான நிர்வகிக்கும் அமைப்பு அவசியமாகிறது. 10.2.4ல் மேலும் இது பரிசீலிக்கப்படுகிறது. மீன் வள அதிகாரமுடையோரின் வேலை மீன் பிடிப்போர் மற்றும் மீன் வளர்ப்போருடன் நெருக்கம் கொள்வதே. சுற்றுச்சூழல் நிலையில் பொறுப்பானவர் யார் என்பதை அடையாளம் கண்டு நிரூபிப்பதில் சிரமம் இருப்பினும், மாற்றங்களை அடையாளம் காண விரைவில் அவர்களால் செல்ல இயலும்.

## 2. கொள்கை நடவடிக்கைகள் (கட்டுரை 10.2)

**"கடல்வளப் பாதுகாத்தல், நாடுகள் மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கி அவற்றின் மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கச் செய்வதுடன் கடல்வளம் பாதிக்கப்பட்டால் உடன் அவர்கள் பங்கு கொண்டு அதனை நிவர்த்தி செய்ய முனைப்புடன் செயல்பட வேண்டும்."(கட்டுரை 10.2.1)**

45. முடிவு மேற்கொள்ளும் முறைக்கு போதிய பொதுமக்களின் பங்களிப்பு, (ஆதாரங்களைப் பயன்படுத்தும் முடிவுகள்) முன்மொழியப்படும் திட்டங்களுக்கு, பரந்த ஆதரவை உறுதி செய்யும். நிறுவன முறைகள் சட்ட கட்டமைப்பு மூலம் எளிதாக்கப்படும் சட்டம் இயற்றுவோர், திட்டமிடுவோர் அவைகளால் பாதிக்கப்படுவோருடன் விரோதம் கொள்ளும் வகையிலான முறைகள் நீண்ட காலத்தில் வெற்றிபெறும் வாய்ப்பு இல்லாதது என்பதை உணருதல் வேண்டும்.

46. வளங்களைப் பயன்படுத்துவோர், பிற பங்குதாரர்கள், திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை முறையில் ஈடுபட்டு இணக்கத்தை ஆதரிக்கும் இடங்களில், உள்ளூர் நிலையில் பொதுவான

இடுபொருள் முக்கியமாகிறது. முடிவு செய்தலில் தவறிழைக்கும் அபாயம், சமூக விரோதம் கொள்ளுதல் ஆகியவை குறைக்கப்படுகின்றன. இடுபொருள் பங்கு தாரர்களின் விழிப்புணர்ச்சி, பங்கு பெறுதலை விரும்புகிறது. அவர்களுடன் தேசீய, மண்டல மற்றும் உள்ளூர் மட்டங்களில் கொள்கை நடவடிக்கைகளில் தேசீய நிலை பற்றி கலந்து ஆலோசித்து அவர்களது ஆர்வத்தை வெளிப்படுத்துவதை உறுதி செய்ய முடிகிறது. அணுகுமுறை வகைகள், கலந்து ஆய்வு செய்யும் குழுக்கள், முடிவு பற்றிய ஆவணங்களைப் பயன்படுத்துதல், சட்டம் இயற்றுவதற்கு முன்பாக பொதுக்கூட்டங்கள், பொது ஜன தொடர்புக்கான சாதனங்களை பயன்படுத்துதல் அரசு சாரா நிறுவனங்களின் பங்கு ஆகியவற்றை உள்ளடக்கும்.

47. முக்கியமாக கடல்சார் மீன் பிடிபாட்டில் மீன்பிடி காலம் மிக அதிகமாகவும் எதிராகவும் உள்ள இடங்களில் மீன் பிடிப்பு நடவடிக்கையின் தன்மை மீன் பிடிப்போருக்கு கொள்கை நடவடிக்கைகளில் திறமையாக பங்கு பெற கஷ்டத்தை கொடுக்கும். கொள்கை நடவடிக்கைகளில் அதிக திறமையுடன் வலியுறுத்தும் வலிமை பெற்ற பிற உபயோகங்களை ஒப்பிடுகையில் இவர்கள் பயனற்ற நிலையில் இருப்பர். இப்பிரச்சினை மீனவர் நிறுவனங்களை ஏற்படுத்திய நாட்டின் ஊக்குவிப்பால் சந்திக்கப்படும். இவை மீன் பிடிப்போரின் கருத்துக்களை தெரிவிக்கும். பொருத்தமான சட்ட கட்டமைப்பு, முடிவு மேற்கொள்ளும் முறைகளில், இந்த நிறுவனங்களின் குரல் ஒலித்திட ஏதுவான நுட்பம் உள்ளதை உறுதி செய்ய வேண்டும். முக்கியமாக கலந்து பேசப்பட்ட நிகழ்ச்சிகளை மீன் பிடிப்போருக்கு தெரிவிப்பதற்கு கலந்து கொள்ள அல்லது குறைந்த பட்சம் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க முறைகள் வழங்கப்பட்டிருப்பதை நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்.

**“கடல் வளங்களைப் பல வகைகளில் பயன்படுத்துவதற்காக முடிவெடுக்கும் பொழுது, பொருளாதார, சமுதாய, பண்பாட்டுக் காரணிகள் ஆகியவற்றின் மேம்பாடுகளை நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.” (கட்டுரை 10.2.2)**

48. தற்போதைய சாத்தியமான (நோக்குடன் நிர்வகிக்கப்படும்) ஆதாரங்களின் பொருளாதார மதிப்பு பரிசீலிக்கப்பட வேண்டும். பயன்படுத்தாதோர் மற்றும் வருங்கால சந்ததியினரின் ஆர்வம் தற்போது பயன்படுத்துவோரின் ஆர்வம் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். பரிசீலிக்கப்பட வேண்டிய உரிய அளவு பொருளாதார மதிப்பும் கூடுதல் ஆகும். ஏதேனும் ஆதாரத்திற்குள்ளாக உபயோகத்தில் உள்ள அதன் சுற்றுச்சூழல் அமைப்பின் தேர்வு மற்றும் தற்போதைய மதிப்புகளிலிருந்து அத்தகைய மதிப்பீடு பெறப்படவேண்டும். அத்தகைய மதிப்பை அடைய கடலோர சுற்றுப்புறச்சூழ்நிலையில் வழங்கப்படும் வெவ்வேறு பொருள் மற்றும் சேவையை தெளிவாக அடையாளம் காணுதல் அவசியம் ஆகும். அவற்றிற்கு சந்தை வசதி இல்லாத இடங்களில் மதிப்பீட்டு தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். உ.ம். திடீர் மதிப்பீடு மற்றும் பாதக சாதகம் அற்ற விலை. வளங்களின் மதிப்பீடு குறித்த சில பிரச்சினைகள் பெட்டிச் செய்தி 4 ல் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**“நாடுகள் கடலோர மேலாண்மைகளுக்காக, கொள்கைகள், விதிமுறைகளை உண்டாக்கும்போது அவற்றால் ஏற்படும் எதிர்பாரா இன்னல்கள் மற்றும் உறுதியற்ற தன்மை ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.” (கட்டுரை 10.2.3)**

49. மீன்வளப்பிரிவில் மீன் வள அதிகாரமுடையோர் சாத்தியமான அபாயங்களைக் கண்டு, மீன் வள ஆர்வத்தைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்வது பொருத்தமான ஒன்றாகும். பொருத்தமான பதிலுரை, முன்னேற்பாடான நடவடிக்கைகளால், அழிவிலிருந்து மீன் வளப்பிரிவை பாதுகாக்கும் முயற்சியேயாகும். அத்தகைய அழிவுகள் நடைபெறும் இடங்களில், உ.ம். தூய்மைக்கேடால் விவசாயக் கழிவு அல்லது அரசு மட்டத்தில் மனசாட்சியுடன் ஆன முடிவு எடுக்குமிடங்களில் மீன் வளப்பிரிவிற்கு ஏற்படும் இழப்பு பிற இடங்களில் நிகழும் பயன்பாடுகளால் ஈடுசெய்யப்படும். அமைப்பை

**பெட்டிச்செய்தி 4– கடலோர வளங்களின் மதிப்பீடு.**

கடலோரப் பகுதி மேலாண்மையின் முக்கிய ஆதாரப் பொருள் சில பொதுவான நிலைப்பாட்டை கண்டுபிடிப்பதேயாகும். இதற்கு எதிராக வெவ்வேறு முறைகளின் தாத்பரியத்தை ஒப்பிடுதல் வேண்டும். முக்கியமாக, விளைவால் ஏற்படும் இழப்பை முடிவு செய்ய, ஆதாரங்களை மதிப்பிடுதலை, இது உள்ளடக்கும். முடிந்தவரையில் பல சாத்தியமான பயன்களில் சிறந்த பயன்பாட்டிற்கான ஒன்றினை உறுதி செய்திட இயலும், வளங்களின் பயன்படுத்துதலுக்கான நோக்கத்தில் முக்கிய பொருள், தொடர்ந்து மற்றும் குறிக்கோளான வகைமுறை உறுதி செய்யப்படுபவைகளில் கடினமாக சில நேரங்களில் பயன்படுத்தப்படுகிறது என்பதே ஆகும்.

கடலோர வளங்களை மதிப்பிடுவதில் பல பிரச்சினைகள் எழும். முதலாவதாக அவை குறைவாக மதிப்பிடப்படும் ஏனெனில், அவை வழங்கும் பொருட்கள், சேவை எல்லை ஆகியவை போதிய அளவில் உணரப்படாத நிலை உள்ளது. சில பொருட்கள் சந்தை அமைப்பிற்கு வெளியே வழங்கப்படும். அத்தகைய இடங்களில் குறைந்த மதிப்பீடு உண்மையாகவே நிகழும். உதாரணமாக சதுப்பு நிலக்காடுகளில் சூழல் கடமைகளை மீன்களின் உறைவிடமாதல் புயல் மற்றும் சூறாவளி ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும் இடமாதல் போன்ற அதன் பங்கு பற்றி கருதாது, சதுப்பு நிலக் காடுகளில் இடத்தை இறால் பண்ணைகளாக மாற்றுவதிலேயே கவனம் செலுத்தப்படுகிறது.

இரண்டாவது பிரச்சினை மற்றொரு பிரிவின் நடவடிக்கைகளால் கடலோர ஆதாரங்களின் மதிப்பு குறைவது இவ்விளைவுகள் “ புறத்தோற்றங்கள்” என அழைக்கப்படும். இவை சாதகமான வழியிலும் நிகழும். உதாரணமாக மின் நிலையம் வெளியேற்றும் மிதமான சூடான நீர் இப்பகுதியில் சிப்பிகளின் வளர்ச்சியில் சாதகமான விளைவினை உண்டாக்குதல். எனினும் பொதுவாக விளைவு பாதகமானதே. உதாரணமாக தூய்மைக் கேடு கடலோர வளங்களின் உற்பத்தியைக் குறைக்கும்.

வளங்களின் பயன் மீதான சரியான மதிப்பீட்டிற்கு தற்போது சந்தை மதிப்புடைய அனைத்து ஆதார பொருட்களின் மதிப்பையும் கணக்கில் கொள்ள வேண்டும். ஆதாரப் பொருட்கள் மட்டுமல்லாது உண்மையென்னவெனில், சந்தையில் ஆதாரப் பொருள் விற்கப்படுவது இல்லையென்பதால் அதற்கு மதிப்பு இல்லையென்று கருதுதல் கூடாது (சுத்தமான காற்று உதாரணமாக கருதப்படலாம்)

புணரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீன் பிரிவில் பங்குதாரர்களக்கு இழப்பீடு வழங்கப்படும்.

**50.** நடவடிக்கை சுருக்கமான வெளிப்பாடு தெரியாத இடங்களில் “அபாயம்” என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்படும். ஆனால் பல்வேறு இயல்பான வெளிப்பாடு நிகழும் தன்மையின் சாத்தியத்தை முடிவு செய்ய போதுமான விபரங்கள் உள்ளன. இந்த ரீதியில் அபாயம், பொதுவாக காப்பீடு செய்யப்படலாம்.

**51.** சில நேரங்களில் “நிலையற்ற தன்மை” என்ற வார்த்தை இயன்ற வெளிப்பாடுகளின் எல்லைக்குள் கணக்கிடக்கூடிய சாத்தியத்திற்கு போதாத தகவல்கள் இருக்கும் இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. இங்கு காப்பீடு செய்ய இயலாது. உறுதியற்ற தன்மைக்குள்ளும் பல்வேறு வகைகள் அடையாளம் காணப்படுகின்றன. சில வகை நடவடிக்கைகளைத் தொடர்ந்து இயலும் வெளிப்பாடுகளின் எல்லையை அடையாளம் காண இயலாத இடங்களில் உண்மையான உறுதியற்ற தன்மை இருக்கும்.

52. எனினும், அபாயம் மற்றும் நிலையற்ற தன்மைக்கு வழி வகுக்கும் இடர்பாடுகள் கொள்கைக்கு முடிவு ஏற்படுத்தாதபடி கணக்கில் கொள்ளப்பட வேண்டும் என்பது முக்கியமானது. பல முன்னெச்சரிக்கை வகை முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இதனை மேற்கொள்ளலாம். ( உரிய மீன் வள மேலாண்மை வழிகாட்டு முறைகளைப் பார்க்கவும்.) அபாயம் மற்றும் உறுதியற்ற தன்மைகளுக்கு நாடுகளின் பதிலுரைக்கு வழங்கப்படும் குறிப்பிடக்கூடிய அடிப்படை, இலகுவான பொருத்தமான சட்ட கட்டமைப்பு இருக்கவேண்டியது தேவையே ஆகும்.

53. பல நிகழ்வுகளில், இயல்பான வெளிப்பாடுகளின் (அபாயம்) சாத்தியத்தை ஒதுக்குதல் இயலாது எனினும், குறைந்த பட்சம் நேரிடக்கூடிய அபாயத்தின் எல்லை தெரிந்திருக்க வேண்டும். பொருத்தமான நிகழ்வுகளில் அபாயம் இருக்கும் இடங்களில் கீழ்க்கண்டவற்றை மேற்கொள்ள இயலும். வைப்புத் தொகை மீட்பு அமைப்பைப் பயன்படுத்தலாம். நேரிடக்கூடிய இழப்பீட்டின் மதிப்பிற்கு சரியான பத்திரங்களை வாங்குவதற்கு நிறுவனம் முன்வருதல் தேவைப்படும்.

54. இவ்வகை அணுகுமுறை அபாயம் மற்றும் நிலையற்ற தன்மையை உணர்கிறது. பொருளாதாரக் கருவிகளை பயன்படுத்துகிறது. பொருத்தமான குழுவினர் தீர்மானிக்கப்பட்ட விளைவுகளைக் குறைப்பதற்கு சக்தி கிடைக்கிறது. அதன் முக்கியப் பயன், சுத்தப்படுத்துதலை விட தடுத்தலை அது ஊக்குவிக்கிறது. உள்ளூர் நிலைக்கு ஒத்துப் போகும். நலம் வாய்ந்த தொழில் நுட்பத்தில் முதலீடு செய்ய பலம்வாய்ந்த சக்தி அளிக்கப்படுகிறது.

55. இப்பிரச்சினையைக் கையாள மற்றொரு வழி, வளர்ச்சிக் குறுக்கீட்டால் கைவிடப்படும் பயன்களை கணக்கில் கொள்ளுதல் ஆகும். சதுப்பு நிலக் காடுகளை அழிக்கும் நடவடிக்கையை முன்மொழிதல் எனில் இத்தகைய நடவடிக்கைகளுக்கு முந்தைய கிரயம், பயன்கள் கைவிடப்பட்ட நிலையில் தற்போது பயன்படும் சதுப்பு நிலக்காடுகளின் பயன்களை முன்மொழியப்படும் நடவடிக்கைகளால் ஆன பயன்களால் எவ்வாறு சமன்படுத்தப்படும் என்பதனைக் குறிப்பிடும். பல நிகழ்வுகளில் அத்தகைய நடவடிக்கைகளின் மதிப்பீடு குறைவானதே. அழிக்கும் வளர்ச்சியை விட தொடக்கத்தில் உள்ள ஒன்றை ஆதரிக்கும் எனினும், போதிய சாட்சியம் இன்றி இது தீர்மானிக்கப்படுகிறது. பொருளாதார மதிப்பீட்டின் கூடுதல் பயனின் மொத்தம், தேர்வு தற்போதைய சதுப்பு நில பகுதியின் மதிப்பு ஆகியவை கணக்கிடப்படவேண்டும்.

56. இத்தகைய முறைகள் இல்லாத நிலையில், பொருளாதார பயன்பாட்டின் முழு கிரயமும் உற்பத்தி கிரயத்தில் விடுபடுதல் தொடரும். அவர்களுக்கு சங்கத்திலிருந்து மானியம் வழங்க தெரிவிக்கும் இந்த குறுகிய கால நடவடிக்கைகளினால், சுற்றுப்புறச் சூழ்நிலை அழிவில் முடியும் பயன்களைப் பெறுவர்.

57. இயலும் வெளிப்பாடுகளின் எல்லையும் தெரியாத நிலையில் நடவடிக்கையின் வெளிப்பாடு முழுதும் உறுதியற்ற தன்மையாகும் எனில், சாத்தியமான கிரயம் கணக்கிடுவதற்கு இயலாத நிலையில் மாற்ற இயலாத விளைவுகளைக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளை தவிர்க்க வழிகாட்டு விதிகள் இருக்க வேண்டும்.

**“நாடுகள் தங்களது திறமைக்கு ஏற்றவகையில், கடல் மேலாண்மையில் ஒரு விரிவான கடலோரச் சுற்றுப்புறச்சூழலைக் கண்காணிக்கும்பொழுது, இயற்பியல், வேதியியல், உயிரியல், பொருளாதார மற்றும் சமுதாய அளவுகோல்களைப் பயன்படுத்தி அவற்றின் தன்மைக்கேற்பவும் சட்ட விதிமுறைகளை அமைத்து அவற்றை மேம்படுத்த வேண்டும்.” (கட்டுரை 10.2.4)**

58. மேலாண்மை முடிவுகளில் அடங்கும், அபாயம் மற்றும் உறுதியற்ற தன்மைக் கேற்ப, நாடுகள், கடலோர சுற்றுப்புறச்சூழ்நிலையை நிர்வகிக்கும் அமைப்பை நிறுவுதலின் தேவையை

உணரவேண்டும். முடிந்த அளவில் விரைவாக அனைத்து வளங்களிலும் சுற்றுப்புறச்சூழ்நிலை அழிவுகளை அடையாளம் காணுதல் குறிக்கோளாக இருக்க வேண்டும். சுத்தப்படுத்துதலைவிட தடுத்தலே கொள்கையின் நோக்கமாகும்.

**59.** வெவ்வேறு நடவடிக்கையின் விளைவினை அடையாளம் காண நிர்வகித்தல் அவசியமானது. மீன்வளப்பிரிவிற்கு ஆர்வமுள்ளவற்றில் உறைவிடம் தண்ணீர் போன்றவற்றை நிர்வகிக்க மீன் வள அங்கீகாரமுடையோர் உட்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய நிர்வகிப்புக்கு தேவை முதலில் பொருத்தமான குறிப்பீடுகளை அடையாளம் காணுதலே. இரண்டாவதாக நிர்வாக முறைகள் மூலம் கொண்டு செல்லும் போதிய நிறுவன திறனை நிறுவுதல் வேண்டும். மூன்றாவதாக போக்கினை விளங்கிக்கொள்வதற்கான பகுப்பாய்வு தேவை. உ.ம். சுற்றுப்புறச்சூழ்நிலை கொண்டு செல்லும் மாற்றம், மனித இனத் தோற்ற வரலாறுகளால் ஏற்படும் மாற்றம் இவற்றிற்கிடையே வித்தியாசம் காணுதல்.

**60.** மீன் வள அதிகாரமுடையோர் உண்மையான நிர்வகிக்கும் முறைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. இப்பணிகளை மேற்கொள்ளும் பொழுதிலும் பலமான நிலையிலேயே இவர்கள் இருப்பர். எத்தகைய நிறுவன ஏற்பாடுகள் தேர்வு செய்யப்படினும் நாடுகள் கடலோர சுற்றுப்புறச்சூழ்நிலையை நிர்வகிக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். மீன் வள அதிகாரமுடையோர் மீன் வளப் பிரிவு, பிற மீன்வளம், நீர் வாழ் உயிரின வளர்ப்பு ஆகியவற்றின் மீதான விளைவுகளை அடையாளம் காணுவதற்கு ஏதுவான நிலையில் விபரங்கள் பெற வழி இருக்க வேண்டும்.

**61.** மீன் வள அதிகாரமுடையோரின் தனியான ஆர்வத்திற்கு நிர்வகிக்க சில அலகுகள் பெட்டிச் செய்தி 5 ல் உள்ளன.

**62.** திறமையான நிர்வகிப்புக்கு பொருத்தமான நிறுவனத்திறமையிருப்பது அவசியமான ஒன்று அத்தகைய திறன், நிர்வாக நடவடிக்கைகளின் சட்ட கட்டமைப்பிற்கு குறிப்பாக மீன்வளத்திற்கு தொடர்புடையதாக இருக்க வேண்டும். தேசீய மட்டத்தில் (அரசு தனியார் பிரிவு பல்கலைக்கழகம்) தோற்றுவித்து வளர்ச்சி மற்றும் தேவையான சாதனங்களை உபயோகப்படுத்த

**பெட்டிச்செய்தி 5 – கடலோர மேலாண்மை திட்டமிடுதலில் மீன்வள ஒருங்கிணைப்பு குறித்த அலகுகள்**

நிர்வகிக்கப்படவேண்டிய குறிப்பீடுகளை அடையாளம் காண்பது அவசியமாகிறது. எல்லை குறிப்பிட்ட சூழ்நிலையைப் பொறுத்தது. (பிரச்சினைகளின் தன்மை இருக்கும் நிதி ஆதாரம்.)

உள்ளடக்கப்பட வேண்டியவை இயற்பியல் அலகுகள். உ.ம். நிலப்பயன்பாடு வரைபடம் புணரமைக்கப்பட்ட வடிகால் பகுதிகள், கடற்கரையில் மாற்றங்கள், பயன்படுத்தப்படாத நிலம்/ வளர்ச்சி பெற்ற நிலம் விகிதம்.

உயிரியல் மற்றும் வேதியியல் அலகுகள் உ.ம். நீரின் தெளிவு, கடல் தளத்தின் ஒருமைப்பாடு கடல் பாசி, கடல் புல் படுகைகள், பல்வகை உயிரினப் பெருக்கத்தின் அட்டவணை, நிலையான நீர்வாழ் உற்பத்தியால் ஏற்படும் அங்ககப்பொருட்களால் ஆன தூய்மைக் கேடு, RED TIDE நிகழ்வுகள், உறைவிடப்பாதுகாப்பு அளவு.

பொருளாதார மற்றும் சமூகவியல் அலகுகள் உ.ம். உயிரின அடர்த்தி, வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு இன்மை வருமான நிலை மண்டல அளவிலான GDP, முக்கிய நடவடிக்கைகளில் நுழைதல் மற்றும் வெளியேறுதலுக்கான தடைகள், ஆதாரங்களை விநியோகிக்கும் அமைப்பு, சமூக முரண்பாடுகள் நிகழ்தல், வெவ்வேறு பிரிவுகளிலும் மான்யம் நிலை.

(சுற்றுப்புறச்சூழ்நிலை விளைவுகளின் மதிப்பீடு, கொள்கை ஆய்வு, சுற்றுப்புறச்சூழ்நிலை பொருளாதார தொழில்நுட்பம், இயற்கை வனப்புடைய நிலம்/கடலாய்வு, சுற்றுப்புறச்சூழ்நிலை திறன் மதிப்பீடு, புவியியல் விபர அமைப்பு (GIS) போன்றவை) விரிவாக்கி செயல்படுத்திட முறைகள் தேவை. ஆதரவான ஆராய்ச்சி, ஆராய்ச்சியாளர்களுக்குள்ளாக, நாடுகளுக்கிடையே எதிர்ச்செயலாக்கம் அவற்றின் வளர்ச்சிக்கு தேவைப்படுகிறது. (உ.ம். மண்டலம் அல்லது சார் மண்டல மட்டத்தில்)

**“நாடுகள் கடலோர மீன்வள மேலாண்மை குறிப்பாகச் சுற்றுச்சூழல், உயிரியல், பொருளாதார, சமூக, சட்ட மற்றும் நிறுவனத் தன்மைகளை மேம்படுத்த உதவும் வகையில் பலதுறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.” (கட்டுரை 10.2.5)**

**63.** கடலோர மேலாண்மையில் அபாயம் மற்றும் உறுதியற்ற நிலை என்பதால் சுற்றுப்புறச் சூழல் மற்றும் பொருளாதார அமைப்புகளுக்கிடையேயான எதிர்செயல்பாடுகள் மீது ஆராய்ச்சி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**64.** ஆராய்ச்சி தேவைகளை முன்னுரிமைப்படுத்துதல் அவசியம். இது குறித்து, மீன்வள அதிகாரமுடையோர், பிரிவுகளுக்கிடையேயான பிரச்சினைகளிலும், மீன் வளப்பிரிவிற்கு தொடர்புடைய பொருளாதார சமூக பிரச்சினைகளிலும் கவனத்தைத் திருப்ப வேண்டும். கூடுதலாக பாரம்பரிய பிரிவு ஆராய்ச்சி குறிப்பாக மீன் இருப்பு மதிப்பீடு மற்றும் உயிரியல் குறித்தவற்றிலும் கவனம் கொள்ள வேண்டும். சில இயன்ற தலைப்புகள் பெட்டிச் செய்தி – **6** ல் உள்ளன.

**பெட்டிச்செய்தி 6 – மீன்வள அதிகாரம் உடையோருக்காக கடலோரப் பகுதி மேலாண்மையுள் மீன் வள இணக்கம் குறித்த இயலும் ஆராய்ச்சித் தலைப்புகள்**

<u>சுற்றுப்புறச்சூழல்பணி</u>– கடலோரப்பகுதியைப் பயன்படுத்தும் மீன் பிடிப்போர் உள்ளிட்ட வெவ்வேறு உபயோகிப்பாளரை உள்ளடக்கி முழுதுமாக கொண்டு செல்லும் திறன் மீதான ஆய்வுகள், விளைவுகளின் திருப்பம் போன்றவை முன்மொழியப்படும் திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடும் தேவை உணரப்படுதல்.

<u>ஆதாரங்களின் சுறுசுறுப்பான நிலை</u> – வளங்களின் இயற்கையான மாறுபடும் தன்மை, மனித இனத்தால் ஆன விளைவு ஆகியவற்றை வேறுபடுத்தும் மேலாண்மை நடவடிக்கை / தட்பவெட்ப மாற்றங்களால் நேரும் நீண்ட காலப் போக்கை எதிர் நோக்கும் ஆராய்ச்சியை உள்ளடக்கும்.

<u>பயன்படுத்தப்படும் ஆராய்ச்சி</u> – உ.ம். பிரிவுகளின் சுறுசுறுப்பை ஆராய்தல், பொருத்தமான சுற்றுப்புறச் சூழ்நிலை இடர்ப்பாடுகளின் மதிப்பீடு, எதிர்நோக்கும் முறைகள். இவற்றின் அடிப்படையில் சிக்கனமான மற்றும் எளிமையான சுற்றுப்புறச் சூழ்நிலையை நிர்வகிக்கும் அமைப்புகளை ஏற்படுத்துதல்.

<u>சமூக பொருளாதாரம்</u> – கடலோரப் பகுதியில் பொருளாதார நடவடிக்கையின் அடிப்படை காரணிகளை அடையாளம் காணுதல்.

<u>பொருளாதாரம்</u> – மதிப்பீடு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைப்பு மற்றும் பொருளாதார சக்தி அமைப்புகளின் விளைவு.

<u>நிறுவனப் பிரச்சினைகள்</u> – சந்தை விலையை அனுமதிக்க தேவைப்படும் சொத்து மற்றும் சட்ட உரிமைகள் கட்டமைப்பு, உள்ளூர் மட்டத்தில் சமுதாயத்தினர் மேலாண்மை செய்திட நிறுவன ஏற்பாடுகள் அதிகமான பகுதிகளில் இணைந்த மேலாண்மையை வளர்த்தல்

65. அத்தகைய ஆராய்ச்சிகள் அனைத்தும் சங்கங்களின் மூலமாக மேற்கொள்ளப்படும் என்று மீன்வள அதிகாரமுடையோர் உறுதி செய்ய தேவையில்லை. மீன் வள கொள்கைகளை அமைப்போர் மற்றும் விஞ்ஞானிகளிடையே கடலோர மேலாண்மை திட்டமிடுதலில் முக்கிய பிரச்சினைகளை உரியவாறு ஆராய்ச்சி நிறுவனங்கள் ஒருங்கிணைப்பதை உறுதி செய்ய எளிதான தொடர்பை ஊக்கப்படுத்துதல் வேண்டும். ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை அமைப்பதில் மீன் வள அதிகாரமுடையோர் கிடைக்கும் நிதிக்கு இணையாக முன்னுரிமை நிறுவும் தேவை ஏற்படுகிறது. (பொருந்தும் பொழுது நிதியை அதிகப்படுத்தும் வகையில் நிகழ்வை அமைத்தல்) அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளுக்கு நிதி வழங்கப்பட்டதை உறுதி செய்ய வேண்டும். மேலும் மீன் வள அதிகாரமுடையோர், அனைத்து தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள் விஞ்ஞானிகள் நேரடியாக பொறுப்பாகவில்லையெனினும், அத்தகைய ஆராய்ச்சியைப் பற்றி அறிவதற்கு வகை செய்ய வேண்டும்.

66. ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் தேசீய மற்றும் சர்வ தேச அளவில் பிற நிறுவனங்களில் உள்ளவர்களுடன் இணைந்து செயலாற்றுவதை ஊக்கப்படுத்துதலை முடிவு செய்தல்.

**3. மண்டல ஒத்துழைப்பு (கட்டுரை 10.3)**

**“நாடுகள் நிலைநிறுத்தக்கூடிய கடலோர வள ஆதாரங்களைப் பயன்படுத்துதலிலும், சுற்றுப்புறச்சூழலைப் பாதுகாப்பதிலும் அருகில் உள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பை நல்க வேண்டும்.” (கட்டுரை 10.3.1 )**

**“மீன்பிடி செயல்பாடுகளினால் கடற்கரை நீரகச் சூழல் அமைவு எல்லையைக் கடந்து சுற்றுச்சூழலானது விரும்பத்தகாத அளவில் பாதிக்கப்படும்பொழுது நாடுகள்**

**(அ) சரியான நேரத்தில் தகவல்களை அளிப்பதுடன், முடியுமானால் இயற்கைவளம் பாதிக்கப்படும் நாட்டிற்கு முன் அறிவிப்பு அறிக்கையையும் கொடுக்க வேண்டும்.**

**(ஆ) எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அந்த நாடுகளுடன் கலந்தாலோசிக்கவேண்டும். (கட்டுரை 10.3.2)**

**“நாடுகள், கடலோர மீன்வள மேலாண்மையினை மேம்படுத்துவதற்காகச் சார் மண்டல மற்றும் மண்டல அளவில் ஒத்துழைக்க வேண்டும்.” (கட்டுரை 10.3.3)**

67. சில வகை மீன் இருப்புகள் பங்கிடலாம் அல்லது பரிமாற்றம் செய்யலாம். ஒரு எல்லைக்கு மேற்பட்ட வற்றுள் வாழ்க்கைச் சுழற்சியின் பகுதியை செலவழித்திருக்கும் நிகழ்வுகளில் ஒரு நாட்டின் கடலோரப்பகுதியின் வளர்ச்சி அடுத்துள்ள நாடுகளின் மீன் இருப்பில் விளைவுகளை ஏற்படுத்தி இருக்கும்.

68. சுற்றுப்புறச்சூழ்நிலை விளைவுகள் உ.ம். தூய்மைக்கேடு, கடல் அரிப்பால் விளைபவை. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு கடல் நீரோட்டங்களால் எடுத்துச் செல்லப் படுகின்றன. பாதிக்கப்படக்கூடும் நாடு மற்றும் நாடுகளுக்கிடையில் கலந்தாய்வு, முன்மொழியப்படும் சுற்றுப்புறச்சூழல் மாற்றத்தின் பொருத்தமான மதிப்பீட்டிற்கு உதவிடும்.

69. மீன்வளம் உட்பட பல கடலோர ஆதாரங்கள் பலமான மண்டல தன்மை உடையது. பொருத்தமான இடங்களில் நாடுகள் சார்மண்டலம், மண்டல அளவில் நுட்பங்களை விரிவாக்குதல், அறிவு பரிமாற்றத்திற்கான மூலக்கூறுகள், அனுபவம் மற்றும் கடலோர ஆதாரங்களின் பொறுப்பான வளர்ச்சி மற்றும் மேலாண்மைக்கு உதவிட தொழில் நுட்ப உதவி போன்ற ஆராய்ச்சி திட்டங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

70. ஒத்துழைப்புக்கான மற்றொரு பகுதி விபர பரிமாற்றமாகும். பொருத்தமான இடங்களில் சரியான முறையில் சரியான நேரத்தில் வைத்திருக்கும் தொடர்புடைய விவரங்களை நாடுகள் வழங்க வேண்டும். மீன் வளத்திற்கே அந்த விபரங்கள் பொருத்தமுடையது ஆகலாம் (ஆதாரங்களின் உயிரியல் பண்புகள், சிற்றின வகைகளின் உற்பத்தி, பொருளாதார விபரங்கள்) மற்றும் கடலோர வளர்ச்சியில் மீன்இருப்பின் மீதான விளைவுக்கும் பொருந்தலாம். (உ.ம். உறைவிடம் மற்றும் தூய்மைக்கேடு விளைவுகள்)

## 4. நடைமுறைப்படுத்துதல் (கட்டுரை 10.4)

**“நாடுகள், திட்டம், வளர்ச்சி, மீன்வளப் பாதுகாப்பு மற்றும் கடலோரப்பகுதி மேலாண்மை போன்றவற்றில் ஈடுபடும் தேசீயக் குழுமங்களுக்கு ஒத்துழைப்பு தந்து ஒருங்கிணைக்கும் வகையில் உரிய அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.” (கட்டுரை 10.4.1)**

71. மரபுப்பிரிவினரின் திட்டமிடுதல் பொதுவாக பிரிவு ஏற்படுத்தும் மற்றும் பிற பிரிவுக்கு அனுப்பும் அல்லது பிற பிரிவிலிருந்து தோன்றி அதனுள் விளைவுகளை ஏற்படுத்தும் ஆதாரங்களின் புறத்தோற்றங்களை குறைந்த அளவிலேயே கணக்கில் கொள்ளும். முன்னேறிய திட்டமிடுதல் ஒத்த அமைச்சகங்களை அடையாளம் கண்டு பிரிவுகளுக்கிடையே விளைவுகள் மற்றும் மேலாண்மைக் குறுக்கீட்டால் ஏற்படும் விளைவுகளையும் மதிப்பிட ஏதுவாகும். அத்தகைய கொள்கை ஆய்வுகள், மீன்வளப்பிரிவின் கருத்துக்களை திறமையாக தெரிவிக்க அடிப்படையானதாகும். முதலாவதாக பகுதி மேலாண்மை முறைகள் வடிவமைக்கப்படும் பொழுது, இரண்டாவதாக திட்டம் நடைமுறைப் படுத்துதலின் போது தொடர்புடைய அமைச்சகங்களுக்கும் வர்த்தக பேச்சு வார்த்தை முறைகளில் பங்கு கொள்ளும் நிர்வாக வளர்ச்சித்திட்ட கருத்துருக்களுக்கு திருப்தியான பேச்சு வார்த்தைகளுக்காக கொள்கை ஆய்வுகள் உதவும்.

72. பொருத்தமான நிறுவன ஏற்பாடுகள், பிரிவுகளுக்கிடையே பகுதி மேலாண்மைக்காக முறைகளை வடிவமைத்து வழங்க வேண்டியுள்ளது. முரண்பாடுடைய பிரிவில் அடிப்படையிலான உண்மையான முன்மொழியப்படும் நடவடிக்கைகளின் தீர்மானங்களுக்காக அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும்.

**“நாடுகள், குழுமங்கள் மற்றும் மீன்துறையைச் சார்ந்த குழுமங்கள் கடலோர மேலாண்மையைக் கையாள சரியான தொழில் நுட்பத்திறனும், நிதி ஆதாரமும் பெற்றனவாக உள்ளன என்பதனை உறுதி செய்ய வேண்டும்” (கட்டுரை 10.4.2)**

73. கடமைகளைப் பின்பற்றுதலில், மீன்வள அதிகாரமுடையோரின் அமைப்பு மற்றும் திறன் கடலோர மேலாண்மை திட்டமிடுதலில் பலமான மீன்வள ஒருங்கிணைப்பை உறுதி செய்ய வேண்டும். அதிகாரமுடையோர், தேவையான சுருக்கமான திட்டமிடுதலின் தேவைக்கேற்ப பயிற்சி பெற்ற பொதுவானவர் மற்றும் வல்லுநர்கள் கிடைப்பதற்கு, கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். பிரிவுகளுக்குள் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை ஒருங்கிணைக்க ஏதேனும் மையக்குழுவை நிறுவி முறையாக கவனிக்க வேண்டும்.

74. பல நாடுகளில் பிரிவுகளுக்கிடையே நிறுவனங்களின் திறன் பொதுவானது என கருதும் பொழுது, மீன் வளத்திற்கு இது தனியான தொடர்புடையது ஆகிறது. கொள்கை மற்றும் நிறுவன ஆய்வுகளில் அனைத்து வகை பிரிவு திட்டமிடுதலில் மீன் வள அதிகாரமுடையோர் திறமை மற்றும் அனுபவம் குறைந்து இருப்பது வழக்கமற்றது அல்ல.

75. பிரிவின் நடவடிக்கைகள் மற்றும் ஆர்வம் கடலோர மேலாண்மைத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்பதற்கு உறுதி அளித்திட வேண்டும். பொருளாதார மற்றும் சமூக நலத்திற்கு இப்பிரிவு தனது பங்களிப்பை அதிகப்படுத்தி உள்ளது என்ற வகையில் 4

முக்கியமான பிரிவுகளில் பலத்தை வளர்த்துள்ளது என்பது இன்றியமையாததாகும். அவையாவன –

- உயிர் இயற்பியல், சமூக மற்றும் பொருளாதர விபரங்கள் கொள்கை ஆய்வில் அவற்றின் உபயோகங்கள் பற்றிய விபரங்கள் சேகரிப்பு, ஆய்வில் திறமை அனுபவம்
- உள்ளூர் தேசீய, சார் மண்டல, மண்டலத்தில் உள்ள திறந்தவெளி பிரச்சினைகள், பிரிவுகளுக்கிடையே விளைவுகள் ஆகியவற்றைக் கையாளுவதற்கு நிறுவன ஏற்பாடுகளை அமைத்தல்
- பிரிவு திட்டமிடுதலில் திறமை மற்றும் அனுபவம்
- அமல்படுத்தும் திறன்

76. கூடுதலாக மீன்வள அதிகாரமுடையோரில் சட்டப் பணியாளர்களை நியமித்திட தேவையில்லை. இந்த அதிகாரமுடையோரின் பணியாளர்கள் பிரிவைப் பற்றி போதுமானவரை அறிந்திருப்பர். சுற்றுப்புறச் சூழல் மற்றும் புதிய விதிகளை வரைவு படுத்துதலில் இவற்றின் இணைப்புகள் சிறந்த பங்கு பெறும்.

## இணைப்பு –1

## அருஞ்சொல் பொருள்

| | |
|---|---|
| **திட்ட மதிப்பீடு** | வர்த்தகத்தில் இல்லாத சுற்றுச்சூழல் பொருள் அல்லது சேவைக்கு நாணய மதிப்பை நிறுவ தொழில் நுட்பம். உ.ம். ஒரு காட்சி சார்ந்த வசீகரிப்பு. அவர்கள் கொடுக்க முன் வரும் தொகையை பதில் அளிப்பவரிடம் கோருவது. இம்முறையில் வெற்றி ஏற்பட்ட போதிலும் தற்போதைய மறு மதிப்பீடுகள், இது எச்சரிக்கையுடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் முறைப்படியான ஆராய்ச்சியால் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கின்றன. |
| **வைப்புத்தொகை மீட்பு அமைப்பு** | வளங்குன்றுதல் அல்லது தூய்மைக் கேட்டில் முடிவடையும் உற்பத்தி பொருட்களின் விலையில் கட்டணம் விதிக்கப்படும் முறை. உற்பத்தி பொருள் அல்லது (அதன் மிகுதி) மறுசுழற்சியில் பெறப்படின் திருப்பித் தரப்படும். |
| **சாதக பாதகமற்ற விலை** | வர்த்தக ரீதியில் இல்லாத சுற்றுச்சூழல் " பொருள்" ஒன்றுக்கு மதிப்பை நிர்ணயிக்கும் மதிப்பீட்டு முறை. சுற்றுப்புறச்சூழ்நிலை பொருள்களின் விலையில் மாற்றங்கள், குறிப்பாக ரியல் எஸ்டேட் விலையில் விலை மாற்றங்கள், மதிப்பை பிரிக்க புள்ளியியல் ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் பொருளாகும். இந்த நுட்பம் ஆதார மதிப்பீடுகளை கையாளுவதில், மீன்வளப் பிரிவில் குறைவான பயன்பாடு உடையது. ஆனால் கடலோர ஆதாரங்களின் பிற வகை மதிப்பீடுகளுக்கு மிகவும் பொருத்தமானது. |
| **இணக்கம் இன்மைக்கான கட்டணம்** | சுற்றுப்புறச் சூழ்நிலை தேவைகளுக்கு இணக்கமில்லாது இருப்பின் "கூடுதல் விலை செலுத்தப்படவேண்டும்" சுற்றுப்புறச்சூழ்நிலைக்கு ஏற்படும் பாதகங்களுக்காக இது சமூகத்திற்கு செலுத்தப்படும் விலையாகும். |
| **செயலாற்றும் பத்திரங்கள்** | வைப்புத்தொகை மீட்பு அமைப்பு போன்றது. சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு ஏற்ப இயலும் பாதகங்களுக்கு சமூகத்திற்காக மதிப்பிடப்பட்ட கிரயம். இக்கிரயத்திற்கு சரியான பத்திரம் ஏற்படுத்தப்படும். சுற்றுப்புறச்சூழ்நிலை தேவைகளுக்கு இணக்கமான பாதுகாப்பு தொகையும் ஆகும். இத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் இது பறிமுதல் செய்யப்படும். |
| **வர்த்தக அனுமதிகள்** | இந்த அமைப்பில் தூய்மைக்கேட்டினை வெளியேற்ற, ஆதாரங்களை பயன்படுத்த உரிமை ஆகியவை இலவசமாக அல்லது கட்டுப்படுத்தப்பட்ட "அனுமதி" சந்தை மூலமாக பரிமாற்றம் செய்யப் படுகிறது. உ.ம். மீன் வளத்தில் தனியான மாற்றக்கூடிய பங்கீடு வர்த்தகமாகும், தாது உப்புகள் சலுகையில் குறையும் உரிமைகள் மற்றும் நீர் வாழ் கழிவுகளை வெளியேற்ற சந்தை அனுமதி. |

கடல்சார் மீன்வளம், மற்றும் பெரிய ஏரிகளில் உள்ள மீன்வளம் பலவழிகளில் கடலோரப்பகுதிகளை சார்ந்திருக்கும். பல மீன் பிடிபாடுகள் கடலோர இருப்பை அடிப்படையாகக் கொண்டது. கரையிலிருந்து தொலைவில் உள்ள அதிக அளவில் பிடிக்கப்படும் இருப்புகள் அதன் பகுதி வாழ்க்கையை அண்மைக் கடலோரப்பகுதியில் கழித்திருக்கும். (நாற்றங்கால் அல்லது உணவுப்பகுதி) கடலோரப்பகுதியில் உணவுச் சங்கிலியின் முக்கிய பகுதியாக, முதன்மை உற்பத்தியை மீன் இருப்புகள் நம்பி உள்ளன. இடம் மற்றும் ஆதாரங்களுக்காக நீர் வாழ் உயிரின வளர்ப்பு கடல் பகுதியை சார்ந்துள்ளது. கடலோர சுற்றுப்புறச் சூழ்நிலையில் மாற்றங்களில் முடியும் நடவடிக்கைகள், கடல் சார் மீன் வளப் பிரிவில் விளைவுகளைக் கொண்டிருக்கும். மீன்வளப் பிரிவு பிற கடலோர நடவடிக்கைகளையும் பாதிக்கும். இடத்திற்கான போட்டி மூலம் கடலோரப் பகுதி மேலாண்மை மற்றும் வளர்ச்சித் திட்டம் என்ற எல்லைக்குள்ளாக, மீன் வளப்பிரிவின் மேலாண்மை மற்றும் வளர்ச்சியைப் பரிசீலிக்கும் தேவை உள்ளது. அதாவது ஆதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை என்ற எல்லைக்குள்ளாக, சுற்றுப்புறம் கடலோரப் பகுதியின் நடவடிக்கைகள் பொறுப்பார்ந்த மீன் வள நடத்தை விதித்தொகுப்பின் கட்டுரை 10க்கு விரிவான பொருளாக வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இது, அரிதான கடலோர ஆதாரங்களைப் பயன்படுத்த உதவிட, கடலோர மேலாண்மையை மீன்வளத்தை ஒருங்கிணைப்பதைக் கருதும். இந்த வெளியீடு, கட்டுரை 10ன் தொகுதிகளைத் தெளிவாகக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தொடர்புடைய விளக்கங்களும் பரிசீலனைகளும் அமைந்துள்ளன. கடலோர பகுதிகளின் மீன் வள ஆதாரங்களைப் பயன்படுத்துவதை வளர்ச்சியடைய செய்வதில் அனைவருக்கும் வழிகாட்டு முறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கடல் மற்றும் நிலம் இரண்டிற்கும் இடையே உள்ள எல்லை மட்டும் அல்லாது பெரிதான உள்நாட்டு நீர்நிலைகளிலும் நீர்/நிலம் எல்லையையும் கூட இது உள்ளடக்கும். மீன் பிடி பாடு மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு இரண்டையும், ஒரு பிரிவுக்கு என தெளிவாக குறிப்பிடாதவரை, பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்பு மற்றும் வழிகாட்டு முறைகளில் மீன் வளப்பிரிவு குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளும்.

*Translated and Printed by the Bay of Bengal Programme*
*Inter-Governmental Organisation*
*January 2007*